சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

36

ஆடி 2023 பிரதம ஆசிரியர்: மு.தயாளன்

கு. குணறுபேஸ்
அகரா
தாட்சாயினி
அலெக்ஸ் பரந்தாமன்
மு.தயாளன்
சியாமளா யோகேஸ்வரன்

இதயராசன்
பிரமி
டிலுக்சி சந்திரகுமார்
கற்சிலைமடு தாரு
பேராசிரியர் செ. யோகராசா

வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்

£4.00 / 150Rs/50Rs(india)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication



மு.தயாளன்
300Rs/£4





மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4





மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
400Rs/£4




மு.தயாளன்
400Rs/£4



சு. ஆர்த்திகா
500Rs/£4



அலெக்ஸ்
பரந்தாமன்
400Rs/£4

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்.

எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் பேசும் வித்தகர்கள்

இலக்கியம் என்பது மக்களின் இரசனைக்காகவும் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக அணுகு வதற்காகவுமே பயன்படுகிறது. இந்த வரையறுப்பை பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். நடை முறையில் அப்படியில்லாமல் மக்கள் நகைக்கும்படியாக குழு நிலைச் சண்டையில் ஈடுபடுகின்றமை வருத்தம்தரும் வண்ணம் உள்ளது.

ஒரு நகரத்தில் வாழும் எழுத்தாளர்களால் ஒன்றுபட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்தமுடியாத பரிதாபகரமான சூழ்நிலை நிலவுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு நிகழ்வுக்கு ஒரு எழுத்தாளர் வரவில்லை. ஏன் வரவில்லை என்று கேட்டதற்கு நிகழ்வினை நடாத்துபவர்களோடு என்னால் ஒத்துப்போக முடியவில்லை என்று கூறினார். இன்னொரு எழுத்தாளர் அந்தப் பிரிவினரோடு ஒத்துப் போயிருந்தாலும் அவர்களுடைய அழைப்பிதழில் தனக்கு வேண்டாதவர் ஒருவரைப் போட்டிருக்கிறார்கள் அதனால் தன்னால் சமூகமளிக்க முடியாது என்று கூறிவிடுகிறார். இன்னொரு எழுத்தாளர் தன்னை வீட்டிற்கு வந்து அழைக்கவில்லை அதனால் வரவில்லை என்று கூறுகிறார். இன்னொருவரோ தான் மூத்த எழுத்தாளர் என்றும் தன்னைப் பேசுவதற்குப் போடாமல் புதிய ஒரு எழுத்தாளருக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டார்கள் அதனால் நான் சமூகமளிக்க முடியாது என்று கூறுகிறார்.

இவர்களை எப்படி எழுத்தாளர்கள் என்று அழைப்பது? இவர்கள் எப்படி மக்களுக்கான இலக்கியத்தைப் படைக்கப் போகிறார்கள்? என்ற வினாக்கள் என் மனதில் எழுந்த வண்ணமே உள்ளது.

இந்த நிலைமை களத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த நாடுகளிலும் தொடர்கிறது. இந்த இலக்கியம் பேசும் வித்தகர்களை என்னதான் செய்வது? மக்களே! உங்களிடமே விட்டுவிடுகிறேன். பதிலைக் கூறுங்கள்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கங்கள்


பக்கம் 3
முரண்பாடு

பக்கம் 9
காலங்கடந்த ஞானம்

பக்கம் 14
பசி


**சந்தா விபரம்:**
**Srilanka:1000Rs/Year**
Mrs Sasikala Thanabalasingam,
Commercial bank, Trinco branch,
8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:**
80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan,
Barclays, Sort code 20-37-15, A/C
Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22


பக்கம் 21 - படிப்பும் பாதிப்பும்
பக்கம் 25 - கரும்பலகை
பக்கம் 29 - மனச்சாட்சி பேசுமா
பக்கம் 36 - விமர்சனம்
பக்கம் 40 - பழயளந்த இயற்கை
பக்கம் 46 - பயணங்கள் முடிவதில்லை
பக்கம் 51 - என்ரை ஐயோ!
பக்கம் 56 - மஞ்சரி 33 ஒரு பார்வை

பக்கம் 1
இலக்கியம் பேசும் வித்தகர்கள்



**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்



**முதன்மை ஆசிரியர்** மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா,
திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா
**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் . T. சௌந்தர்


மஞ்சரி 40 தனி ஒருவரின் சிறுகதைகளோடு வரவுள்ளது. கதைகள் மஞ்சரியில் வந்திருக்கக் கூடாது. எழுத்தாளர் மஞ்சரியில் ஒரு கதையாவது எழுதி இருக்கவேண்டும். இம் முறை 72 பக்கங்களுடன் புதிய அமைப்பில் வரவுள்ளது.முடிவுத் திகதி 15-08-2023

**அன்பான வேண்டுகோள்.**
படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரம் அனுப்ப மறக்க வேண்டாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடு

நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தி உழைத்த களைப்புடன் அன்றைய இரவு உணவுக்காய் ஆயத்தப்பட்டுத் தங்கள் சேனையிலே பயிரிடப்பட்டிருந்த மரக்கறிகள் சிலவற்றைப் பிடுங்கியதுடன் உழைப்புக்குச் சென்ற கணவன் கொண்டு வந்த மீனையும் வெட்டிக் கழுவி அதற்கு உப்புப் புளி தேடி எடுத்து 60 ஆம் கட்டைக் குடியிருப்புப் பெண்கள் இரவு ஆகாரத்தை தயார் செய்தெடுத்தனர்.

இரவு நேரம் ஒன்பது மணிக்கெல்லாம் அவர்களின் வீடுகள் சிலவற்றில் கைவிளக்கு வெளிச்சத்தில் இரவு உணவு கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் பரிமாறப்பட்டது. தூரத்தே அமைந்திருந்த ஒரு சில வீடுகளில் பெற்றோல் மக்ஸ் எரிந்து கொண்டிருந்தது. தங்கம்மாவின் வீட்டில் பெற்றோல்மக்ஸ் இல்லாததனால் கைவிளக்குத்தான் அவர்களின் வீட்டிற்கு ஒளி கொடுத்தது.



கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இரவு உணவைக் கொடுத்த கையோடு தானும் உண்டுவிட்டு தங்கம்மாவும் மூன்று பிள்ளைகளுமாய் சேர்ந்து குடத்திலிருந்த நீரை

● கு. குணறுபேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்து குசினியிலே அடுக்கி வைத்து விட்டு வந்தபோது பகல் முழுவதும் பாடுபட்டு உழைத்த களைப்புடன் வந்த சுப்பிரமணியம் நித்திரைக்குச் சென்றிருந்தார். தாயும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து வேலைகளை முடித்தபடி கதவை இழுத்துக் கட்டி விட்டு அவர்களும் நித்திரைக்கு ஆயத்தமாயினர்.

இந்த சுப்பிரமணியம் தங்கம்மாவின் குடும்பம் பல வருடங்களுக்கு முன்பாக இடம்பெற்ற யுத்தத்தில் தங்கள் உடமைகளையும், உறவுகளையும் கிளிநொச்சியில் பறிகொடுத்துவிட்டு உயிர் வாழ்வதற்காக இடம்பெயர்ந்து வந்த போதுதான் 60ஆம் கட்டைக் காட்டுப் பகுதியில் அங்கு சேனைப் பயிர்ச்செய்கை செய்து வாழ்பவர்களுடன் காடு வெட்டிச் சேனை செய்து தங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை சுழற்றிக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

இக் குடியிருப்பாளர்கள் தண்ணீர் தேடி கிட்டத்தட்ட மூன்று கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். வீட்டுக்கார ஆண்களெல்லாம் காலை ஆறு மணிக்கெல்லாம் தங்கள் ஈருருளிகளிலே பின்பக்கமாக இரண்டு குடமும் முன் பக்கமாக இரண்டு குடமும் கட்டி எடுத்துக் கொண்டு குடி தண்ணீர் எடுத்து வீடுகளுக்குக் கொடுத்த பின்னர்தான் சேனைப்பயிர் செய்கைக்கும் மேலதிகமாக ஏதாவது தொழில் தேடி நகர்புறங்களுக்கும் செல்லுவர்.

அன்றைய நாளின் பரிமாறல்களுக்காக தேவைப்படும் தண்ணீரை வீட்டிலுள்ள பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அருகிலுள்ள வயலுக்குச் சென்று தலையில் ஒன்றுக்கு மேல் ஒன்று நீர் நிரம்பிய குடம் சும்மாடு வைத்து அடுக்கியபடியும் இடுப்பில் இரண்டு குடமும் சுமந்து ஒற்றையடிப் பாதை வழி சென்று தண்ணீர் எடுத்து வருவது தான் வழமை. 60ஆம் கட்டை குடியேற்ற கிராமத்தில் சீரான போக்கு வரத்து வசதியுமில்லை. தண்ணீர் வசதியுமில்லை. மின்சார வசதியுமில்லை.

வீடுகளும் அப்படித்தான் ஓலைக் குடிசைகள்தான் அவர்களின்வீடு. சீரான கதவுகள் கூட அதற்கு இருக்காது. அந்த குடிசைகளுக்கான கதவுகள் தகரத்தினால்தான் செய்யப்பட்டிருக்கும்.

சௌகரியமான வாழ்க்கை முறை இல்லை. உரலில் இட்டு நெல்லைக் குற்றி எடுத்துத்தான் சோறு சமைக்கவும் வேண்டும். அம்மியில் அமர்ந்திருந்து அரைத்து சமைக்கும் அவர்களின் கிராமத்துச் சமையல் முறைகள் எப்போதும் சுவையானதாகவே இருக்கும் என்பதுடன் உடலும் ஆரோக்கியமாகவே இருக்கும். இப்படியான வாழ்க்கை முறை கொண்ட இவர்களுக்கு பெரிதாக ஏதும் நோய் நொடிகள் ஏற்படுவதுமில்லை. ஆனால் காட்டுப் பகுதியை அண்மித்த குடியேற்றம் என்பதனால் கொடிய விலங்குகள் இரவு நேரங்களில் வந்து சேனையை உளக்கி விட்டுச் செல்வதும் யானைகள் வந்து துவம்சம் செய்து மரங்களை அடித்து முறித்து விட்டுச் செல்வதெல்லாம் அவ்வப்போது நடைபெறுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு வேளைகளில் அந்தச் சேனைக் கிராமத்தில் சீன வெடிச்சத்தம் கேட்டால் ஏதோ காட்டு விலங்குகள் சேனைக்குள் புகுந்து விட்டதென்பதை அக் கிராமத்தவர்கள் அறிந்து கொள்வர். காலையில் எழுந்ததும் அது ஒரு பரபரப்புச் செய்தியாய் அப்பகுதியில் பரவிவிடுவது அவர்களின் காதுகளுக்கு இப்போது பழக்கப்பட்டு விட்டது.

நித்திரைக்கு சென்றிருந்த சுப்பிரமணியம் தங்கம்மாவின்வீடு அன்று இரவு யானைகளின் அட்டகாசத் திற்கு உள்ளாக்கப்படப் போகின்றதென்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

இரவு நேரம் இரண்டு மணியைக் கடந்து சென்று கொண்டிருந்தது. 60 ஆம் கட்டை கிராமம் முழுவதும் நள்ளிரவு நேர அமைதி ஆட் கொண்டிருந்தது. ஒரு சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த விடி விளக்குகள் ஒளி மங்கி அணைவதற்கு ஒரு சில வினாடிகள் இருக்கும் நிலையில் மங்கி எரிந்து கொண்டிருந்தன. தூரத்தே சில வீடுகளில் முற்றத்து மரங்களில் கட்டப்பட்டிருந்த பெற்றோல் மக்ஸ்சுகளில் அதன் காற்றமுக்கமும் மண்ணெண்ணையும் குறைந்து அவைகளும் ஒளி மங்கி அணைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில்தான் சுப்பிரமணியம் - தங்கம்மாவின் வீட்டுப் பக்கமாயிருந்து நள்ளிரவு வேளையில் அழுகுரல்கள் கேட்க ஆரம்பித்தன. “உள்ளதை எல்லாம் எறிகணைகளுக்கும் கை எறி குண்டுகளுக்கும் பறிகொடுத்துவிட்டு உயிர் வாழ்ந்தால் போதுமென்றுதானே நாங்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்தோம். ஏதோ காடு வெட்டி களனி செய்தெண்டாலும்உயிர்வாழ்வமெண்டு இங்கு வந்து இந்தக் காட்டுக்குள்ள குடியேறின எங்களையும் இண்டைக்கு நீ அடிச்சி உடைச்சி தகர்த்தெறிந்து போட்டுப் போறாய் என்ற கடவுளே வினாயகப் பெருமானே. நீயா இப்படி வந்து எங்களை உன் காலால் பந்தாடி போட்டுப் போறாய்? என்ற கடவுளே இதைவிட நீ எங்களை யுத்தத்திலேயே பலி எடுத்திருக்கலாமே...” என்று தங்கம்மா தலையில் அடித்தபடி நிலத்தில் கிடந்தபடியே மண்ணை எடுத்து விசிறி அழுது புலம்பிக் கொண்டிருக்க பெண் பிள்ளைகள் மூவரும் தாயுடன் சேர்ந்து அழுது கொண்டிருந்தனர். சுப்பரமணியத்தார் உயிரைக் காத்துக் கொண்டவராய் திகைத்துப் போய் நின்றிருந்தார். தங்கம்மாவினதும் பிள்ளைகளதும் அழுகுரல் கேட்டு அந்த நள்ளிரவு வேளையில் அயல் வீடுகளில் இருந்தவர்கள் எரிபந்தங்களைப் பிடித்தபடி சுப்பிரமணியத்தின் வீட்டை வந்தடைந்தபோதுதான் நடந்த சங்கதி தெரிய வந்தது.

காட்டிலே இருந்து 60ஆம் கட்டை கிராமத்திற்குள் புகுந்த யானைக் கூட்டம் சுப்பிரமணியம் தங்கம்மாவின் சேனைகளை உளக்கி சிதைத்ததோடு அவர்களின் குடிசை வீட்டை முட்டி மோதி உடைந்தெறிந்த வெறி பிடித்த யானைகள் சுப்பிரமணியம் வீட்டிலிருந்த யாரையேனும் அடித்துக் கொல்ல வேண்டும்போல் பிளிறிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேசம் கொண்டபடி அவர்களின் குடிசைக்கருகில் நின்றன. யானைகள் குடிசையில் முட்டியபோது எழுந்த பரபரப்புச் சத்தத்தினால் திடுக்கிட்டு எழுந்தவர்கள் அலறி அடித்தபடி வெளியே வந்ததனால் தங்கள் உயிர்களைக் காத்துக் கொண்டனர். அந்த யானைகள் பதம் பார்ப்பதாயிருந்தால் சுப்பிரமணியத்தைத்தான் ஏறி மிதித்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் நித்திரையாயிருந்த இடத்திற்கருகில்தான் யானைகள் முட்டி மோதி குடி சையை உடைத்திருந்தன. ஏதோ கடவுள் புண்ணியத்தினால் சுப்பிர மணியத்தாருக்கும் குடும்பத்தினருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை. ஆனால் வயிற்றுப்பசி ஆறுவதற்காக வைத்திருந்த பத்து மூடை நெல்லை அப்படியே சரித்து மிதித்துவிட்டு அவற்றை வயிறு நிறையும் படியாய் சாப்பிட்டு விட்டு மிகுதியை கால்களால் மிதித்து நாசம் செய்தபடி நின்றிருந்தன. இவர்களின் அழுகுரல் கேட்டு ஓடிவந்த கிராமத்தவர்கள் தீப்பந்தங்களையும் பட்டாசுகளையும் யானைகளை நோக்கி வீசி எறிந்து யானைகளை காட்டுப் பக்கமாய் செலுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த யானைகள் கூட்டம் அவ்வ ளவு விரைவாக காடுகளுக்குள் செல்வதாயில்லை. மீண்டும் மீண் டும் சேனைக்குள் வருவதற்கே முயற்சி செய் தன. யானைகளுக்கும் குடியிருப்பாளர்களுக்குமிடையே நீண்ட நேரமாக போராட்டங்கள் நடந்தன. இந்த அமர்களத்தினால் நேரம் எப்படி ஓடிச் சென்றதென்று தெரியவில்லை. நேரம் இப்பொழுது அதிகாலை நான்கு முப்பதை தாண்டிச் சென்று கொண்டிருந்தது. ஒருவாறாக மெல்ல மெல்ல யானைகள் காட்டிற்குள் நகரத் தொடங்கின. அழுது புலம்பியபடி நின்றவர்களுக்கும் யானைகளை கலைக்க வந்தவர்களுக்குமென அயல்வீட்டார்கள் சூடான தேநீரைத் தயார் செய்து கொண்டு வந்து கொடுக்க அனைவருமாய் சேர்ந்து முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் நின்றபடி தேநீரைக் குடித்தனர். காலைப் பொழுதின் சில்லென்ற குளிருக்கும் மனச்சோர்விற்கும் சூடான தேநீர் உற்சாகத்தை கொடுத்திருந்தது.

"யானைகளுக்கு காட்டிலே சாப்பாடு இல்லாத காரணத்தினால்தான் அவைகள் கிராமத்திற்குள் மனித குடியிருப்பைத் தேடி உணவுக்காக வருகின்றன" என்றார் அங்கு நின்றிருந்த ஒருவர். "காடுகளை கண்டபடி மனிதர்கள் வெட்டி அழிப்பதனால் யானைகள் கிராமத் திற்குள் படை எடுக்கின்றன" என்றார் இன்னுமொருவர். "வனஜீவராசிகள் அலுவலர்கள் இந்த காட்டு மிருகங்கள் தொடர்பாக சீரான பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில்லை. இப்போது வரட்சியுமான காலப் பகுதிஎன்ற படியினால் காட்டிலே நீர் நிலைகளும் வற்றிப் போயிருக்கும். ஆன காரணத் தினால்தான் யானைகள் மனித குடியிருப்புகளிலே உணவும் நீரும் தேடிப் படையெடுக்கின்றன" என்றார் தவராசா.

வைகறைப் பொழுது கடந்து கிழக்கு வானில் சூரியன் கதிர் பரப்பி உதயமாகிக் கொண்டிருந்தான். 60ஆம் கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் முழுவதும் யானைகளின் அட்ட காசச் செய்தி பரவின. சிறுவர்கள், வளர்ந்தவர்கள், பெரியவர்கள் என பெண்களும் ஆண்களுமாக எல்லோரும் யானைகளின் அட்டகாசத்தை பார் வையிட வந்தனர். சுப்பிரமணியத்தின் வீட்டு முற்றத்தில் ஜனக்கூட்டம் திரண்டிருந்தது. "நம்மட சனங்களுக்கு எல்லா விதத்திலையும் அழிவுதான் என்னதான் பாவப்பட்ட இனம் நம்மட இனமோ தெரியாது" என்று கூட்டத்தில் நின்ற ஒருவர் சோகத்துடன் கூறினார்.

ஆண்களெல்லாம் ஒன்று சேர்ந்து கத்தி, மண்வெட்டி போன்ற கருவிகளை எடுத்து பேயாட்டம் ஆடி முடித்த பின் ஒழுங்கின்றிக் கிடக்கும் இடம் போல் முறித்து கிடந்த வாழை மரங்களையும் கரும்புகளையும் மாமரங்களையும் வெட்டித் துப்புரவு செய்து இடத்தை சுத்தம் செய்தனர். உடைக்கப்பட்ட குடிசையில் கிடந்த தடிகளையும் மண்சுவர்களையும் கூட்டி ஒதுக்கி எடுத்து ஒரு இடத்தில் குவித்துக் கொண்டிருந்தனர் இன்னும் சிலர். சிதைக்கப்பட்டபடி கொட்டிக்கிடந்த நெல் மணிகளையெல்லாம் பெண்கள் கூட்டி எடுத்து குடிசையின் உட்பகுதியை துப்பரவு செய்து கொண்டிருந்தனர்.

இப்படியாய் சுப்பிரமணியம் - தங்கம்மா அவர்களின் குடும்பத்துடன் துன்பத்தில் பங்கு கொண்டவர்களாக கிராமத்தவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது காலை நேரம் ஒன்பது மணியைக் கடந்து செல்ல இன்னும் ஒரு சில வினாடிகள் இருந்தன. அயல்வீட்டுக்காரர் ஒருவர் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவர் களுக்கு காலை உணவு கொடுப்பதற்காக எப்படியோ முயற்சி செய்து இருபது கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகர்புறத்திற்கு ஆள் அனுப்பி பத்து இறாத்தல் வெதுப்பியை வேண்டியெ டுத்தார். அதற்கு தேங்காய்ச் சம்பல் தயார் செய்தெடுத்து காலை உணவைக் கொண்டு வந்து கொடுத்தார். வேலைக் களைப்புடன் காலை உணவை அவர்கள் மரத்தடியில் ஒன்று கூடி பலதையும், பத்தையும் பற்றி பேசியபடி உண்டனர்.

அப்போது கடந்த ஒரு வருடத்துக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று ஒருவரினால் ஞாபகப்படுத்தப்பட்டது. தனது எருமைப்பட்டிகளை பகல் முழுவதும் புற்றரைகளில் மேயவிட்டு தண்ணீர் காட்டி பொழுது பட்டவுடன் எரு துகளைப் பட்டியில் அடைப்பதற்காக சென்று கொண்டிருந்த ஆறுமுகத்தாரை வழியே காட்டுக்குளிருந்து குறுக்கிட்ட யானை ஒன்று காலால் அடித்துத்தானே கொன்று போட்டது. இந்த மனி தர்களுக்கும் யானைகளுக்குமிடை யிலான முரண் பாடு எப்போதுதான் முடிவுக்கு வருமோ தெரியவில்லை". என்று அந்த சம்பவத்தை மீண்டும் ஞாபகப்படுத்தினார்.

அன்றைய நாள் துன்பமும் சோகமும் கலந்த நாளாகவே கடந்து சென்றது. இப்போது சூரியன் மேற்கு வானில் புதைந்து கொண்டிருந்தான். இன்றைய இரவில் யார் வீட்டில் மீண்டும் யானைகள் வந்து அட்டகாசம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்யாருடைய சேனைகள் துவம்சம் செய்யப்படும்

என்றும் யாருடைய உயிர்களேனும் யானைகளினால் பறிக்கப்பட்டுவிடுமோ என்ற பீதியுடனும் அன்றைய இரவுப் பொழுதுக்குள் சென்றனர் 60ஆம் கட்டை கிராம வாசிகள்.

## படித்ததில் பிடித்தது

ஒருவர் Asylum கேட்கும் நோக்கத்தில் இங்கிலாந்துக்கு கள்ளத் தோணில வந்திருக்கார். தொழில் தேடி நாயாய் அலைஞ்சும் Work Permit இல்லாததால தொழில் ஒண்டும் சரியா 'செட்' ஆகல. கையில இருந்த காசெல்லாம் முடிஞ்சுது. இப்படி அலைஞ்சு திரிஞ்சு கொண்டிருக்கைல, ஓர் இடத்தில Job Fair ஒண்டு நடப்பதை கண்டு நம்மவர் உள்ள போய் இருக்கார். அங்கயும் Work Permit தான் கேட்டிருக்காங்க. ஒரு இடத்தில் மட்டும் 'Work Permit தேவை இல்லை. உடனடி வேலை' என்றிருந்தது. உடனே உள்ளே போய் 'எனக்கு வேலை கொடுங்க' எண்டு கேட்டிருக்கிறார்.

இண்டர்வியு செய்பவர் வேலை பற்றி விபரிக்க ஆரம்பிக்க முன்பே "எனக்கு விபரம் ஒன்றும் தேவையில்லை. எந்த வேலை என்றாலும் செய்யத் தயார். பசிக்கிறது. முதலில் சாப்பாடு கொடுங்க" என்றிருக்கிறார், நம்ம ஆள்.

உடனே அவருக்கு சிறந்த சாப்பாடு பரிமாறப்பட்டது. உண்டபின், "என்ன வேலை?" என்றிருக்கிறார்.

"அது ஒன்றுமில்ல. மிருக கண்காட்சி ஒன்று நடத்துகிறோம். அதில் ஒரு புலிக்கு திடீரென சுகவீனம் ஆகிவிட்டது. நீங்கள் புலி வேசம் போட்டு மாலை வரை கூண்டினுள் நின்றால் போதும்" என்றிருக்கின்றனர்.

இவரும் வேறு வழியின்றி, புலி வேசத்துடன் கூண்டுக்குள் நுளைந்து உட்கார்ந்தார். பார்வையாளர்கள், குழந்தைகள் அந்த புலியை பார்த்து ரசிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இவரும் சந்தோச மிகுதியில் குறழி வித்தையெல்லாம் காட்டி துள்ளித் குதித்திருக்கிறார். அப்போது அப்படியே தவறி அருகிலிருந்த சிங்கத்தின் கூட்டுக்குள் விழுந்துவிட்டார். சிங்கம் இவரை நோக்கி வந்தது. பயத்தில் நடுங்க ஆரம்பித்தார்.

'ஓவராக ஆட்டம் போட்டு இப்படி நிஜ சிங்கத்திடம் மாட்டிவிட்டோமே' என்று கடவுளை வேண்ட ஆரம்பித்துவிட்டார்.

அருகில் வந்த சிங்கம் :

"பயப்படாதே! தம்பி நீர் எவடம் ? யாழ்ப்பாணமோ?" என்று கேட்டது.

**- மீலாத்கீரன் (முகநூல்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங் கடந்த ஞானம்

● அகரா

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கலைப்பிரிவுப் பட்டதாரியாக வெளியேறிய பாமா தனக்கான ஒரு நிரந்தர தொழிலைத் தேடிக்கொண்டு உழைத்து சம்பாதித்து தனது சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்று முடிவெடுத்திருந்தாள். ஆனால் அவளது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்னரே குடும்பத்தினரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்று முடிந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் சாகிறதுக்கு முன்னம் பிள்ளையளின்ர கலியாணம் காட்சியப் பாக்க வேணும், பேரப்பிள்ளைகளைப் பாக்க வேணும்" என்று பல பெற்றோர் கள் சொல்லும் காரணங்களே அவளுக் கும் சொல்லப்பட்டது.

கொள்கைகளையும் வாழ்க்கை பற்றிய கனவுகளையும் சுமந்தவளாக புகுந்த வீட்டில் ஓர் புதிய வாழ்க்கையை




ஆரம்பித்தாள். சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்து விட்ட இவளது கணவன் வரதன், சகோதரியின் அரவ ணைப்பில் வளர்ந்தவன். இவர்களது திருமணத்தின் பின்னர் சகோதரியும் அவளது பிள்ளைகளும் வேலை நிமிர்த்த மாக வெளியூரில் தங்கியிருந்த கணவ ரோடு சென்று குடியேறினர். இதனால் பாமாவும் வரதனும் தனிக்குடித்த னமாக்கப் பட்டனர். பாமா எப்பொழு தும் கலகலப்பாகப் பேசுபவள். எல் லோரிடமும் சகஜமாகப் பழகக்கூடி யவள். பிரயாணங்களையும் புதுப்புது அனுபவங்களையும் விரும்புவள். திருமணத்திற்கு முன்னரான அவளது வாழ்க்கை அப்படித்தான் இருந்தது. திருமணத்தின் பின் அவையெல்லாம் வெறும் கனவா கிப் போயின. அவள் வீட்டுக்குள் ளேயே முடக்கப் பட்டாள். இருப் பினும் வீட்டு வேலைகளை கவ னித்துக் கொண்டு தனது கல் விக்கேற்ற தொழில்வாய்ப்பு களைத் தேட ஆரம்பித்திருந்தாள்.

திருமணமாகி நான்கு மாதங் கள் கடந்த நிலையில் வரதனின் நடவடிக்கைகளில் சில மாற்றங் கள் தென்படவே அது வரை சந்தோசமாக நகர்ந்து கொண்டி ருந்த அவர்களது திருமண வாழ்க்கையில் பிரச்சனைகள் உருவாகத் தொடங்கின. வரதன் குடி மற்றும் புகைத்தலுக்கு அடிமையானவன் என்பதும் நண்பர்க ளோடு சேர்ந்து சீட்டாடுவது மட்டு மன்றி சீட்டாட்டத்தில் இதுவரை பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சம் பணத்தினை இழந்தவன் என்பதும் பாமாவுக்கு தெரியவந்தபோது அவள் மூன்று மாதங்கள் கற்பிணியாக இருந்தாள். ஒரு பெண்ணானவள் கருவில் குழந்தையை சுமக்க ஆரம்பிக்கும்போதே தன்னை ஒரு தாயாக எண்ணி பெருமையடைவதோடு குழந்தை பற்றிய ஏராளமான கனவுகளையும் சுமக்க ஆரம்பித்துவிடுவாள். பிறக்கவிருக்கும் குழந்தைக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் போராட ஆரம்பிக்கும் காலகட்டத்தில் கணவனுடைய செயற்பாடுகளால் மனமுடைந்துபோனாள் பாமா. சிறிது சிறிதாக வீட்டுக்குள் ஆதிக்கம் செலுத்தத்தொடங்கிய அவனது செயற்பாடுகளின் உச்சமாக அவன் மனைவியை அடித்துத் துன்புறுத்தவும் தொடங்கினான்.

இப்படி ஒரு வாழ்க்கையை அவள் தானாக தேடிக்கொள்ளவில்லை. பெற்றோரால், பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு நடந்தேறிய திருமணமாகவிருந்தாலும் இதில் யாரையும் குறை கூறிக்கொள்ள அவள் விரும்பவில்லை. தனது தலைவிதியென்றே எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளத் தொடங்கினாள். தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான கணவனே தன்னை பல பழிச்சொற்கள் கொண்டு பேசுவது அவளை மேலும் வேதனைக்குள்ளாக்கியது. தனக்கு எத்தனை துன்பம் நேர்ந்தபோதும் எப்படியாவது தனது குழந்தையை பெற்றடுத்து ஆளாக்கிவிட வேண்டும் என்று துணிவு கொண்டாள். ஆனால் அவளது கல்வித்தகுதிக்கு ஏற்றாற்போல் ஒரு தொழிலை தேடிக்கொள்வதும் வீட்டை விட்டு வெளியே செல்வதும் வரதனால் தடுக்கப்பட்டது. செய்வதறியாது வீட்டுக்குள்ளேயே யிருந்து வேதனைப்பட்டவளுக்கு "பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்" என்பதுபோல மேலும் ஒரு வேதனை காத்திருந்தது.

பிரசவத்தின்போது ஆரோக்கியமான ஒரு குழந்தையை எதிர்பார்த்தவளுக்கு வெறும் ஏமாற்றமே கிடைத்தது. ஒரு குழந்தை இப்பூவுலகில் பிறந்து, மெல்லச்சிரித்து, தாயின் மார்பகங்களில் புதைந்து, தத்தி நடை நடந்து, கை பிடித்தெழுந்து, கல்வியில் சிறந்து பெரியவனாகி, உலகம் அவனைப் போற்றுவதே எந்தவொரு தாயினதும் எதிர்பார்ப்பாகவிருக்கும். ஆனால் அவளதுகுழந்தைவிசேட தேவையுடைய ஒரு குழந்தையாக அவளது கையில் கிடைத்தான். உளவியல் வைத்தியர் ஒருவரின் ஆலோசனைப்படி கற்ப காலத்தில் அவள் எதிர்நோக்கிய இன்னல்களும் அதனால் ஏற்பட்ட மனவுளைச்சலும் அவளது குழந்தையின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தினாலேயே குழந்தைக்கு இப்படியான ஒரு பிரச்சனை ஏற்பட்டது எனவும் தன் வாழ்நாள் முழுவதும் அவன் இன்னொருவரிலேயே தங்கி வாழ வேண்டிய கடப்பாடு உண்டு என்றும் கூறப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. காலக்கொடுமை தந்த பரிசை அவள் மனப்பூர்வமாகவே ஏற்றுக் கொண்டாள்.

தாயாக தனது கடமைகளைச் செய்திட உறுதி பூண்டாள். வேலை தேடி வெளியில் செல்லமுடியாத நிர்ப்பந்தம் அவளுக்கு. ஒன்று குழந்தையை கூட இருந்து கவனிக்கவேண்டிய பொறுப்பு. மற்றையது கணவனால் கூறப்படும் பழிச்சொற்கள். பெண்கள் பிரச்சனைகளைத் தாங்கிக்கொண்டு எப்போதும் மென்மையாக இருந்து விடுவதில்லை. ஒரு சில நேரங்களில் அதீத மனத்திடனும் வைராக்கியமும் உடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்வர். பாமா கல்விக்கேற்ற தொழிலைத் தேடுவதை நிறுத்திவிட்டு சூழ் நிலைக்கேற்ற தொழிலை தேர்வு செய்து அதில் தன் கல்வியறிவைப் பயன்படுத்த முடிவெடுத்தாள். தனது தந்தையாரின் உதவியுடனும் சிறுவயதிலிருந்தே தந்தைக்கு ஒத்தாசை புரிந்துவந்த அனுபவத்தினாலும் வீட்டிலே கைத்தறி நெசவுத்தொழில் செய்ய ஆரம்பித்தாள். வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டும் பிள்ளையைக் கவனித்துக்கொண்டும் நெசவுத்தொழிலை சிறிது சிறிதாக செய்ய ஆரம்பித்தவள் காலப்போக்கில் மேலும் மூன்று பெண்களை இணைத்துக்கொண்டு தொழிலில் முன்னேற ஆரம்பித்தாள். இருந்தும் நாளுக்கு நாள் வரதனுடைய நாசக்காரச் செயல்கள் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. குழந்தையின் இந்த நிலைக்கு பாமாவே காரணம் என்று மேலும் ஒரு குற்றச்சாட்டை சேர்த்துக்கொண்டு அவளை துன்புறுத்தினான். குழந்தையின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் எந்தவொரு பங்களிப்பும் அவனிடமிருந்து கிடைக்கவில்லை. நண்பர்களின் சேர்க்கையும் குடிபோதையும் கொடுத்த இன்பத்தில் திழைத்துகொண்டிருந்தவன் ஒழுங்காக வேலைக்குச் செல்வதுமில்லை. இதனால் அவன் வேலை பார்த்த தனியார் நிறுவனம் அவனை வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்துவிட தனக்கு பணம் வழங்குமாறு பாமாவை மேலும் அடிக்க ஆரம்பித்தான்.

இப்படியே நாட்கள், மாதங்கள், வருடங்கள் என்று காலம் கரைந்து கொண்டேயிருந்தது. கரைந்துகொண்டிருந்த காலத்தின் மீதும் வாழ்க்கையின் மீதும் பழி போடாமல் தன்னிலும் தனது வளர்ப்பிலும் கல்வியிலும் கொண்ட அதீத நம்பிக்கையாலும் திடகாத்திரத்தாலும் சிறிய அளவில் ஆரம்பித்த நெசவுத்தொழிலில் பாரிய வெற்றி கண்டாள் பாமா. இப்போது அவள் நாற்பது தொழிலாளர்களுடன் இயங்கும் ஒரு கைத்தறி நெசவுத்தொழில் நிறுவனத்தின் உரிமையாளராவாள். இதற்கிடையில் தனது குழந்தையையும் கவனிக்கத்தவறவில்லை அவள். தன்னால் முடிந்தவரை அவனுடனும் நேரம் செலவழித்தாள். விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் அவன் இப்போது தரம் ஏழில் கல்வி கற்கிறான். ஆனால் போராடிக்கிடைத்த தன் வெற்றியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடும் மனநிலையில் பாமா இல்லை. நாளுக்கு நாள் அதிகரித்த வரதனின் செயற்பாடுகள் வரதனுக்கும் பாமாவுக்கும் இடையில் பாரிய இடை வெளியை உருவாக்கிவிட்டிருந்தது. வெறும் நான்கு மாதங்கள் மட்டுமே பரிமாறப்பட்ட அவர்களின் காதலும் அன்பும் காணாமல் போய் பல வருடங்க ளாகியிருந்தது.

இந்நிலையில் தொடர்ச்சியான மது மற்றும் புகைத்தல் பாவனை வரதனை நோயாளியாக்கிவிட்டது. கல்லீரல் புற்றுநோய் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக கொல்லத்தொடங்கியது. நோயின் வீரியத்தால் தாங்கமுடியாத வேதனையடைந்தான். ஆறுதலுக்கு அவனருகில் யாருமில்லை. அவனது பழைய நண்பர்கள் இப்போது தொலைபேசியில்கூட கிடைக்கவில்லை. விரைவாக நகர்ந்து கொண்டிருக்கும் உலகில் ஆசைகளை துரத்திக் கொண் டோடும் மனிதர்களுக்கு அடுத்தவரைக் கவனிக்க எங்கே நேரம் இருக்கப் போகிறது! உறவினர்கள் சிலர் கட மைக்கு எட்டிப்பார்த்துவிட்டு மீண்டும் தமது வாழ்க்கையை துரத்திப்பிடிக்க ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

வரதனுக்கு நோயின் தாக்கம் அதி கரிக்க அதிகரிக்க அவன் வேதனையின் உச்சக்கட்டத்திலிருந்து துடித்தான். வைத்தியசாலையும் வீடுமாகவே அவனது இப்போதைய நாட்கள் நகருகின்றன. பேச்சுத்துணைக்கு கூட அவனருகில் யாருமில்லை. பாமாவிட மிருந்து நேரத்திற்கு உணவுகளும் மருந்துகளும் மட்டுமே வந்தது. அது வும் வீட்டில் உதவிப்பணி புரியும் பெண்ணே வரதனது அறைக்குஅவற்றை எடுத்துவருகிறாள். பாமாவின் முகத்தை ஒருதடவையேனும் பார்க்க வேண்டும் என்ற அவன் துடிப்பு நீண்ட நாட்களாக நிராசையாகவேயிருக்கிறது. நான்கு சுவர்களுக்குள் அடைபட்ட வனை தனிமை கொஞ்சம் கொஞ்சமாக கொன்று கொண்டிருக்கிறது. தான் செய்த தவறுகளை உணர்ந்த போதும் காலம் கடந்த ஞானம் பயனற்றது என் பதை புரிந்துகொண்டான். மனைவி பிள்ளைகள் மட்டுமல்ல தாய் தந்தை உறவினராக இருந்தாலும் கொண்டா டித் தீர்க்கவேண்டிய காலத்தை பயன் படுத்த தவறினால் வாழ்க்கை மீண்டும் வராது என்பதை அந்தத் தனிமை அவனுக்கு கற்றுக்கொடுத்தது. நிச்சய மில்லாத வாழ்க்கையில் விடியும் ஒவ் வொரு நாளிலும் மரணப்போராட் டத்தோடும் பாமாவைக் காண்பதற்காக காத்திருக்கும் வரதன் தொடர்ந்தும் காலத்தால் ஏமாற்றப்பட்டே வரு கிறான்...

எழுதுபவர்கள் எல்லோரும் எழுத்தாளர்கள் அல்ல. மக்களை மதித்து மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவனே எழுத்தாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

● தாட்சாயினி



குருத்துப்பச்சை என்பது அப்படி ஒரு நிறம். நீலவானப் பின்னணியில் மெல்லிய பச்சை அலைவுகள் அசைந்தாடுகிறபோது பிரவகிக்கின்ற அமைதிக்கும் பூரிப்புக்கும் ஈடாக இன்னொரு நிறம் இல்லை. தங்கனுக்கு மென் மயிர்த்தூவலாய் காற்றில் அசைகின்ற நெற்பயிர்கள் கனவில் வந்தன. பிறகு சூரியன் விழுந்து, எழும்பி மழை பெய்கின்ற காட்சிகள் மாறித் தோன்றின. சிறு கலகலப்போசையோடு நெல்மணிகளின் குலுங்கல் ஓசைகள் மட்டுமில்லாமல் வாசமும் நாசியைத் துருவி, இனிமை தன்னைச் சூழ்வது போலிருக்கக் கண்களைத் திறந்தான்.

இருட்டுச் சூழ்ந்திருந்தது. உடலில் வியர்வை. கோலாகலமான கனவு. இது நிஜமானால் ஊரில் அவனொரு பெரிய புள்ளி ஆகலாம் நிஜம் அதுவல்ல.

நீண்டு கொண்டேயிருக்கின்ற நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நெருக்கடிக்குள் அவனது வயல் பச்சை பூப்பது வெறும் கனவில் மட்டுமெனில் அவன் போன்ற வர்களுக்கான மீட்சி எப்போது?

உரம் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை, டீசல் இல்லை, எப்படி உழவு செய்வது? எப்படி நிலம் பச்சை காண்பது? இந்த முறை எல்லாம் பிழைத்துப் போகுமென ஒரு நரை நிறப்பட்சி அவன் காதுக்குள் கிசுகிசுத்துவிட்டுப் பறந்த உணர்வு.



வீட்டில் முழுமையாக மூன்று வேளையும் எல்லா வயிறுகளும் திருப்தியாக நிரம்பின என்று சொல்லிக் கொள்ள முடிவதில்லை. ஒரு நாளைக்கு அவள், இன்னொரு நாளைக்கு அவன் என ஒவ்வொரு வேளை உணவையும் தியாகம் செய்ய வேண்டி நேர்கிறது. பிள்ளைகளுக்குத் தெரியவேண்டியதில்லை. அவர்களுக்குப் படிக்கிற வயசு. நல்லபடியாக உணவு செரிக்கிற வயசு. துன்பம் தெரியாமல் படிக்கட்டும்.

நெல் பால் பிடிக்கிற பருவத்தின் வாசனையை அவன் சிறு வயதிலிருந்தே நேசித்தான். அன்றைக்குத்தான் விதைத்திருந்தான். இரண்டாவது நாள் மழை பெய்தது. இந்த மழைக்கு முளைகள் வரத்தொடங்கினால் நல்லது நல்ல விளைச்சல் கண்டு விடும். உரம்தான் பிரச்சினை பயிர்கள் கொஞ்சம் சத்துக் குன்றி வளரும் ஓரளவு விளைச்சல் வந்தால் கூடப் பரவாயில்லை. பட்டினி இல்லாமல் இருந்தால் போதாதா?

******************

சிவப்பியின் காம்புகளிலிருந்து பால் 'சொர் சொர்' என்று வீழ்ந்தது. வெண் துளிகள் நுரைக்க நுரைக்க ஓர் இசை போலத் ததும்பி வீழ்ந்தன.

சிவப்பி ஒரு அதிசயம்.

ஒரு மாதத்திற்கு முன்பு வரை வீடு வெறிச்சென்றிருந்தது.

சிவப்பி வந்து கன்று போட்ட பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமெங்கும் செம்மை நிரம்பி வழிந்து கடந்த ஆண்டுகளாக வீட்டில் பீடித்திருந்த துர்த்தேவதை கிளம்பிப் போய் விட்டாள் என்று பட்டது.

"அப்பா கண்டுக்குட்டிக்கும் கொஞ்சம் பால் விடுங்கோ...." சுமியின் குரல் செவிகளை வருடுகிறது.

"ஓம்.. ஓம் கண்டுக்கும் குடுத்துத் தான் பால் எடுக்கிறன்."

பெரிய பசு மூன்று லீட்டருக்குப் பால் தேறியது இன்னும் ஆன சாப்பாடு சிவப்பிக்குக் கொடுத்தால் இன்னும் ஒன்றரை லீட்டர் பால் எடுக்கலாம். அதற்குத் தான் ஏற்ற வசதி இல்லையே.

மேய்ச்சல் நிலங்கள் குறைந்து போன பின் எங்கென்று சிவப்பியை மேய விடுவது? இதற்குமுன் பசு வளர்த்த அனுபவமும் இல்லை. வீட்டில் அதற்கான இடவசதியும் இல்லை. வாழ்வாதாரத் திற்கான உதவி செய்ய அந்த நிறுவனம் முன்வந்த போது அவன் பசுவைத்தான் கேட்டான்.

பசுவை வளர்க்கிறதுக்கு ஏற்ற இடம் வீட்டிலை இருக்குத்தானை...?

அவர்கள் வீட்டைச் சுற்றி இருந்த மட்டுமட்டான இடத்தை வந்து பார்த்தார்கள்.

ஒரு பசுமாடு தருவதற்கு நூற்றெட்டுக் கேள்விகள்.

இவனுக்குச் சீ.... என்று போயிற்று. இதுவே தன் சொந்தக்காசில் பசுவொன்று வாங்குவதாகவிருந்தால் இவ்வளவு கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிராதே என்று தன் ஆற்றாமை மீது கோபம் வந்தது.

வெளிநாட்டிற்கென்று கிளம்பியவன் தான் ஒழுங்காகப் படித்திருந்தால் இன்றைக்கொரு வேலையில் இருந்திருக்கலாம். வெளிநாட்டிற்குப் போகிறவர்களையும், அவர்களது வீட்டுப் பொருளாதாரம் நாளுக்கு நாள் உயர்வடைவதையும் பார்க்க ஆசை வந்தது. நாமும் போனால் விருப்பமான வகையில் வீட்டின் வளத்தைச் சீரமைக்கலாம் எனக் கற்பனை உதிரி, உதிரியாய்ப் பெருகியது.

வெளிக்கிட்டு எங்கெங்கோ தெரியாத தேசங்களிலெல்லாம் அலைந்து பிடிபட்டு ஐந்து வருடங்கள் அலைச்சலுக்குப் பிறகு அவனே ஊருக்குத் திரும்பினால் போதும் என்கின்ற மனமாற்றத் தோடு ஊர் திரும்பியிருந்தான்.

மூன்று லீட்டர் பாலில் அரைலீட்டரை வீட்டில் வைத்துக்கொண்டு இரண்டரை லீட்டரை 'லிப்கோ'வில் கொண்டு போய் கொடுத்து விட்டு வருவான் . வெளிநாட்டில் இருந்த காலத்தில் உழைத்து வந்த கொஞ்சக் காசை சுமியின் பெயரில் வங்கியில் இட்டிருந்தான். அதனை எடுப்பதில்லையென்ற சபதம் இருந்தது. இனி நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை நம்ப முடியாது. சுமிக்குத் திருமண வயது வருகிறபோது அவனை வயோதிபம் எட்டிவிடும். அந்த நேரம் அல்லல்படக்கூடாது.

*******************

தங்கன் காலையிலேயே கிளம்பி போயிருந்தான். வீண் அலைச்சல் தான் மிச்சம். ஏபிசியில் இன்னும் உரம் வர வில்லை. ராசனிடம் எருவுக்குச் சொல் லியிருந்தான். களை கொல்லிகளும் எப்போது கிடைக்குமெனத் தெரிய வில்லை.

ஒவ்வொரு நாளும் வயலுக்குப் போய் வெறுமையோடு வயலைப் பார்த்து விட்டுத் திரும்புவது தான் வழக்கம் என்றாகிப்போனது.

*******************

சிவப்பிக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை. வைக்கோலும், பிண்ணாக்கும் வரவர அருகிக் கொண்டு போயின. பசி அதன் வயிற்றைப் பிளந் தது.

பச்சை நிலங்களைக் காண வேண்டு மென ஒரு அவாப் பிறந்தது.

இந்த வீட்டுக்கு வரமுதல் ஒரு பட்டியிலே அது சேர்ந்திருந்தது. பட்டிக் காரன் இடைக்கிடை மேய்ச்சல் நிலங்க ளுக்கு அதனைச் சாய்த்துக் கொண்டு போவான். அந்தி படத் திரும்புவதற் கிடையில் சூரிய ஒளியைக் குடித்துக் குடித்துப் புற்களைக் கடிக்க முடியும். மழை வெள்ளம் வருகிற நாள்கள் தவிர ஒளி சிதறுகிற வெளிகளில் என்ன ஆனந்தமாய் மேய முடியும். அப்போது கன்று கூட இல்லை. தன் இஷ்டப்படி திரிந்தது சிவப்பி . அந்த வெளியில் மேய்கிறபோதுதான் கறுப்பன் அதன் மேல் காதல் கொண்டு நெருங்கியது.

சிவப்பு நிறம் கொண்டு முகில்கள் ஒளிர்ந்த போது பச்சை வெளியின் பளபளப்பில் கறுப்பனோடு சிவப்பி முயங்கிக் கிடந்தது. வெறுவெளி பச் சைத்திரள் தோய்ந்த வெளி அப்படி யொரு வெளியை இந்தச் சில மாதங் களாக சிவப்பியால் காண முடிய வில்லை. வயிறு அரைகுறையாக வெறுமே கிடந்தது.

பசி என்பதை அது கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்தது. வெறும் வயிறென்றாலும் கன்றுக்கான தன் உதிரத்தைப் பாலாக்கும்போது அதனை உரிமையாளன் உறிஞ்சி இழுத்துக் கொண்டு போகின்றான். அவனது குழந்தைக்கெனில் அது சந்தோசமாய் வழங்கும். அவன் பாலை எடுத்துப் போத்தல்களில் நிரப்பி வேறெங்கோ அல்லவா கொண்டு செல்கிறான்.

காலையில் அந்தக் குழந்தை ஓடி வந்தது. பலாவிலைகளையும், ஒரு வாழைப்பழத்தையும் நீட்டியது. நெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே பரிவாகத் தடவிவிட்டது. அதன் பின் அது கன்றை நோக்கிப் போனது. கன்றுக்கெனவும் அதன் கையில் ஒரு வாழைப்பழம் இப்படி எப்பொழுதேனும் சில நாள்கள் அருமையாய் வாய்க்கின்றன.

*******************

தங்கன் தன் நெற்பயிர்களைப் பார்த்தான். மனதில் பெருமிதம் வளர்ந்தது. என்ன மாதிரி ஒரு பச்சைபசேல் என்கிற நிறம். இதுதான் என் மனம் பொங்கியது. இரண்டு நாள்களாக ஆன சாப்பாடு இல்லை.

வீட்டில் பட்டினி இருப்பவர்களை நினைக்க மனசு பொசுங்கியது. இந்தத் தரம் வயலின் பசுமை கொஞ்சம் நிம்மதியைத் தருகிறது. எல்லாரது வயல்களை விடவும் இவனது வயல் இம்முறை கூடத்தான் பச்சை பூத்திருக்கிறது.

வருடம் முழுமைக்குமான அவனது வருமானம் அந்த வயல்தான் இந்தச் சில நாள்கள் வருந்தி உழைத்தால் இந்த வருடத்தின் அரைவாசி நாட்களாவது ஒழுங்காக உணவுண்ணலாம்.

கற்பனைகளை விரியவிட்டுப் பசியை விரட்டினான் தங்கன்.

******************

ரவியிடம் சுமி முறைப்பாடுகொண்டு வந்தாள். சிவப்பி வரவர மெலிந்து கொண்டு வருகிறது அதற்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும்.

எதை என்று வாங்குவது?

சுமிக்கும், மலருக்கும் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கக்கூடத் தற்போதைய விலை நிலவரம் இடம் கொடுக்குதில்லை. இந்த நிலையில் சிவப்பிக்கு எதை வாங்குவது?

'எல்லாத்தையும் தாங்கள் சுருட்டிக்கொண்டு எங்களை நடுத்தெருவிலை விட்டிருக்கிறாங்கள் பாழாப்போன அரசியல்வாதிகள்.....'

நண்பன் சொன்னது ஞாபகத்தில் வந்தது.

சிவப்பி தருணம் பார்த்தது. இங்கிருந்து அறுத்துக் கொண்டு எங்காவது மேய்ச்சல் தரவைக்குப் போக வேண்டும்.

திரும்பி வருவதில் ஒரு பிரச்சினையும் இல்லை. மீள வந்து இந்தக் கொட்டிலுக்குள் கிடந்து ஆற அசை போடலாம். முடியாவிட்டாலும் அந்த வெளியில் கறுப்பனின் நினைவுகளை அசைபோட்டபடி புற்களைக் கொறிக்கலாம்.

ரவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுமியின் ஆசையை நிறைவேற்றாவிட்டால், அவள் கோபித்துக் கொண்டு இருப்பாள்.

அதற்குப் பிறகு அவனுக்கு நிம்மதி இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கடைக்குப் போய்க் கடனுக் குப் பிண்ணாக்கு வாங்கி வந்து கரைத்து சிவப்பிக்கு வைத்தான்.

'மடக் மடக்' கென அது அதனை உறிஞ்சிக் குடித்தது ஆனாலும், அதன் பார்வையில் அதற்கு அது போதாது எனச் சொல்லியது. ஏக்கத்தோடு பார்த்த அதன் விழிகளை எதிர் கொள்ள முடி யாது. அவன் அப்பால் போனான்.

******************

தங்கன் வயலே கிடையாகக் கிடந் தான்.

இரவு பெய்திருந்த மழை காலையில் குறைந்து வெயில் மின்னலிடத் தொடங்கியது.

பளிச் பளிச்சென்று பச்சைப் பயிர்களின் முத்துக்களின் மீது நீர் அரும்பி மின்னியது.

வயிற்றின் பசி பயிர்களைப் பார்த்தபோது காணாமலாகியது. மனம் பூத்தது.

இனி எல்லாத் துயரும் அகலுமென நம்பிக்கை கிளர்ந்தது.

மழைக்குளிருக்குப் பசி இன்னும் அதிகமானது. சிவப்பி கட்டுக்களை அவிழ்த்து விட்டது. கன்று 'ம்மா ம்மா..' என்றது. அது திரும்பிப் பாராமல் நடந்தது. தெருவில் நாய்கள் குரைத்தன. சிவப்பி தன் பெரிய உடம்பை அசைத்துக் கொண்டு போனது. அது தன் கனவுகளில் விரிந்த வெளிகளை நோக்கி ஓடியது. பசி அதனைத் துரத்தியது.

******************

தங்கன் வயலுக்கு வந்தபோது வயல் சிதைந்து கிடந்தது. பயிர்கள் நாசமுற்றிருந்தன. பெரிய உருப்படி ஒன்று எஞ்சியிருந்த பச்சைப்பரப்பில் நிழலாக அசைவதைக் கண்டான்.

'சூ....ய்....'

தன் பெரிய விழிகளை மேலே நிமிர்த்திய சிவப்பியின் வாய்க்குள் பச்சைப் பயிர்கள் வழிந்தன.

அவன் கண்களில் அனல் ஏற ஆங்காரமாய்க் கத்திக்கொண்டு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பி திமிறிக் கொண்டு எஞ்சிய பயிர்களை உழக்கிக் கொண்டு வரம்புக்கப்பால் பாய்ந்தது.

அவன் கண்கள் இரத்தக் கொழுந்தாயின வெளியே நிறுத்திச் சாய்ந்திருந்த சைக்கிள் கூடைக்குள்ளிருந்த கத்தியை எடுத்துக் கொண்டு துரத்த ஆரம்பித்தான்.

சிவப்பியால் தன் உடலைத் தூக்கிக் கொண்டு ஓட முடியவில்லை. வயலைத் தாண்டி நெஞ்சில் ஏறியவுடன் மூச்சி ரைத்து நின்றது. தங்கன் ஆவேசமாய் ஓடினான். அதன் பின்னங்கால்களை நோக்கிக் கத்தியை ஓங்கினான்.

சிவப்பி 'மா...' வென்று வீறிட்டது. கால்கள் இரண்டும் குருதியில் குளித்தன. துண்டுகளாலான கால்கள் தொங்கிச் சரிய முன்கால்களை மடித்துக் குந்தியது.

திகைத்துப் போய் ஓடி வந்த பக்கத் துக் கமக்காரன் தங்கனின் கையிலிருந்த கத்தியைப் பறித்தான்.

"என்ன வேலையடா செய்து போட்டாய் ஆறறிவுச் சீவன்...." தங்க னது வயிற்றுக்குள் எரிந்த பசி கோபமா கியது. அவன் தூஷணத்தில் ஏசினான். இன்னும் கோபம் தணியவில்லை. தான் செய்த செயலின் தீவிரம் இன்னும் அவனுக்கு உறைக்கவில்லை.

ரவி தூரத்திலிருந்து பதறியபடி ஓடி வந்தான். சிவப்பி பெரிய கண்களில் வேதனை ஒழுகிக் கொண்டிருக்க அல றியபடியிருந்தது. இரத்தத்தை முகர்ந்த படி அருகே வந்த நாயொன்று பசுவின் வெட்டுண்ட காலொன்றைத் தூக்கிக் கொண்டோடியது. ஒரு சிறுவன் அதனை விரட்டினான்.

"நாசமாப் போவார், என்ரை பசு விண்டை காலை இப்பிடி அறுத்துப் போட்டாங்கள்...." ரவி கத்தினான்.

பசி மென்று துப்பிய சக்கையென அவன் குரல் தீனமாய் வெளிவந்தது. சிவப்பியின் கண்களிலிருந்த வலியின் வேதனை அவனை உலுப்பியது.

"விளைஞ்சு கிடக்கிற வயலுக்கை மாட்டை அவிட்டுவிட்டு மேய விட் டிட்டு, அவர் நியாயம் கதைக்க வந்திட் டார்..." தங்கன் குரலில் இன்னும் ஆத்திரம் தணியவில்லை.

"மாடு பயிரை மேஞ்சால் அதைக் கட்டி வைக்க வேண்டியது தானை இப்பிடியே காலை வெட்டுறது..."

ரவியின் குரல் இன்னும் சீறியது. சனங்கள் மொய்க்கத் தொடங்கினார்கள். சிவப்பி இன்னும் அலறிக் கொண்டி ருந்தது. சற்று முன் அதன் வயிற்றில் தணிந்த பசி இப்போது வெட்டுண்ட கால்களினூடு குருதியாய் வெளியேறிக் கொண்டிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• அலெக்ஸ் பரந்தாமன்

# படிப்பும் பாதிப்பும்

**கதை: தண்ணீர்  ஆசிரியர் : வடஅல்வை கே. சின்னராசா**
**தொகுப்பு: காலநதியின் கற்குழிவு**



மனிதர்களைச் 'சகமனிதன்' என்ற உணர்வு கொண்டு, அந்த மனிதர்களை மதிக்காத இன்னொரு மனிதர்கள் வாழ்ந்த காலத்தில், 'சாதித்தடிப்பு' எப்படிச் சமூகத்தில் வேரோடியிருந்தது... என்பதற்கு, படைப்பாளர்கள் அவ்வப்போது தங்கள் படைப்புகள்மூலம் வெளிக்கொணர்ந்தமைக்கு, அப்படைப்புகளே சாட்சியமாக அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்கும் வரைக்கும், அதை எதிர்த்து நிற்கும் வரைக்கும் எந்தவொரு சமூகத்திற்கும் விடிவில்லை என்பதையும் அப்படி எதிர்க்க ஒற்றுமை கொண்டு துணிந்தெழுந்துவிட்டால், ஒரு சிறு துரும்புங்கூட அத்துணிவுக்கு முன்பாக செயலிழந்து போகும் என்பதையும் இங்கு ஒரு படைப்பானது பதிவு செய்துவிட்டு நகர்ந்திருக்கிறது.

வட அல்வை கே. சின்னராஜா அவர்கள் எழுதியிருக்கும் தண்ணீர் எனும் சிறுகதை (காலநதியின் கற்குழிவு - சிறுகதைத்தொகுப்பு) ஒரு காலத்தின் சாட்சியாக வாசகர்களிடத்தில் பகிரப்பட்டிருக்கிறது.

கதையின் ஆசிரியர் பின் நிலைப் படுத்தப்பட்ட மக்களின் பக்கம் நின்றுகொண்டு கதையை நகர்த்தி யிருக்கிறார். கதையின் மொழிநடை அபாரம். எந்தவொரு சாதாரண வாசகனாலும் விளங்கிக் கொள்ளக்கூடிய எழுத்து. இந்த எழுத்துநடையூடாக ஆசிரியர் சொல்ல வருவது என்ன?

" எந்தவொரு அழுத்தத்துக்கும் அடிபணிதலின்றி, அந்த அழுத்தத்தை எப்போது நீ எதிர்த்து நிற்கிறாயோ.. ? அதன்முன் எப்போது பலம் பெறுகி றாயோ...? அப்போதே உன்விடிவுக்கான திசை வெளிக்கத் தொடங்கும்" என்பதே அது. கதையின் பிரதான கருப்பொரு ளாக குடிதண்ணீர்! அதன்மூலம் சாதீய வர்க்க முரணைக்கொண்டு கதை நகர்த்தப்படுகிறது.

வானமானது வஞ்சகமற்று பூமியில் நீரைக் பொழிந்து கொண்டாலும், அந்த நீர்நிலைகளை தமக்கெனப் பங்கு போட்டு, அடுத்தவர்க்கு வழங்க மறுக்கும் மனிதர்களின் குரூர குணவியல்புகளையும் நீரைப்பெற முடியாத சாதாரணமானவர்களின் அந்தரிப்புகளையும், இந்த இரண்டுக்கும் நடுவில் தடுப்புச் சுவராக... வழி வழியாகத் தொடரும் சாதீய ஆதிக் கத்தின் செயற்பாடுகளையும் ஒட்டு மொத்த வடிவத்தில் வெளிக் காட்டி நிற்கிறது இச்சிறுகதை.

குறுகிய மனம்கொண்ட மனிதர்கள், தம்மனித இனத்துக்குள்ளேயே இன்னொரு பகுதியினரை தமக்குச் சமாந்தரமற்ற மனிதர்களாக நினைத்து, அவர்கள் எதுவும் தொட்டால் 'தீட்டு' என்றும், அதைத் தடுக்காவிடில் தமது பரம்பரையைத் தொடரும் பழியென்றும் செயற்படும்போது, இவர்களுக்கு ரதி, தங்கா, வாணி என்போர்களூடாகச் சொல்ல வேண்டிய விடயத்தை முகத்திலடித்தாற்போல் சொல்லி யிருக்கிறார் கதையின் இறுதி நிலையில் ஆசிரியர்.

கொட்டும்மழை சற்றுத் தணிந்த நிலையில், கங்குமட்டைகள், கொக்கா ரைகள், காவோலைகள் சகிதம் வீட்டிற்கு வரும் ரதியின் தாயார், மகளிடம் தேநீர் போட்டுத் தருமாறு கேட்கிறாள். ரதியும் தேநீர் வைப்ப தற்காக நீர்க்குடத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தபோது, அது வெறுமையாக இருக்கிறது. நீர் எடுத்து வருவதாக தாயிடம் கூறிவிட்டு, வழியில் தனது மச்சாள்மார் சகிதம் தோட்டக்கிண றொன்றினை நோக்கிச் செல்கிறார்கள். தோட்டக்கிணறெல்லாம் வெள்ளம் நிரம்பியிருப்பது கண்டு, அருகிலுள்ள ஒரு குடியிருப்புப் பக்கம் செல்கிறார்கள். ஆனால், அந்தக் குடியிருப்பு மக்களோ இராணுவத்தினரின் அச்சம் காரணமாக, வேறு இடங்களுக்குச் சென்றுவிட்ட நிலையில், அக்குடியிருப்புக் கிணறுக ளுக்குள் கழிவுஒயில், குப்பைகூழங்கள் போடப்பட்டுக் கிடப்பதை அவர்கள் காணுகின்றார்கள்.

இந்த இடத்தில்தான் சாதி வெறியர்களின் உச்சவெளிப்பாடு... கதையில் வெளிப்படுகிறது. தாங்கள் ஊரில் இல்லாத வேளையிலும், சாதியில் பின் நிலைப்படுத்தப்பட்டவர்கள் தங்கள் கிணறுகளில் தண்ணீர் அள்ளி விடக்கூடாது... என்பதற்காக, அச்செய லைத் தடுத்திருக்கிறார்கள்... என்பதை அப்பெண்கள் மூவரும் புரிந்து கொள்கிறார்கள். குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமே... என்ற மன அந்தரிப்பின் நிமித்தம், அருகில் உள்ள பிள்ளையார் கோவில் கிணற்றடிக்குப் போகின்றனர். கோவில் கிணற்றுநீர் நன்நீராகக் காணப் பட்டதில் மிக்க மகிழ்ச்சி அவர்களுக்கு.

அந்தநேரம் ஊரின் வட்ட விதானை என்று அழைக்கப்படும் பூரணம்பிள்ளை என்பவர் தனது மாட்டுக்குத் தண்ணீர் வைத்துக்கொண்டிருக்கையில், ரதி தனது குடத்தை கிணற்றுக் கட்டிலின் மேல் வைக்கிறாள்.

"என்ன வரவர மேல வந்திட்டியள். நாங்கள் பாவமெண்டு கொஞ்சம் இடம் குடுத்தால் நீங்கள் மிஞ்சப் பார்க்கி றியள்..." பூரணம்பிள்ளையிடமிருந்து சாதீயமனோநிலை வெளிப்படுகிறது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?"

"விளங்காட்டி குடத்தை எடுத்து நிலத்திலை வை. அப்ப விளங்கும்..."

இங்கே பிரச்சினை என்னவெனில், பின்நிலைப்படுத்தப்பட்ட சமூகத்தி லுள்ள ஒருபெண், தனது குடத்தை கோயில் கிணற்றின் கட்டின்மேல் வைத்தது தீட்டாகத் தெரிகிறது பூரணம் பிள்ளைக்கு.

"கங்கையில குளிச்சாலும் காக்கை அன்னமாகுமா? நீங்கள் கொஞ்சம் உய ரலாமெண்டுதான் பார்க்கிறியள். உது ஒருக்காலும் நடக்காது..."

பூரணம்பிள்ளை கூறும் "வரவர மேல வந்திட்டியள்". "நீங்கள் கொஞ்சம் உயரலாமெண்டுதான் பார்க்கிறியள்.. " எனும் வார்த்தைகள் பூரணப்பட்ட சாதீயத்தின் உச்சவெளிப்பாடாக ஆசிரியர் காண்பிக்கிறார்.

ஆனால், பிற்படுத்தப்பட்டு நிற்கும் சமூகம் கூறுவது என்னவெனில், " எங்களை நீங்கள் உயர்த்த வேணு மெண்டு எதிர்பார்க்கேல்லை. மனிசரா மதிச்சாக் காணும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரை மதிக்கும் பண்பற்ற இவர்கள் தமக்குக் கீழானோரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதன் விளைவு... தம்மால் அடிமைப்படுத்தப்பட்டோர்மீது வார்த்தைகளால், செயல்களால்தம்தாக்குதலை நடத்திக் காட்டுவார்கள்.

ரதி கிணற்றுக்கட்டில் குடத்தை வைத்ததைக் கண்ட பூரணம்பிள்ளை, அக்குடத்தை தனது காலால் தட்டி விடுகிறார். குடம் உருண்டோடுகிறது. ரதிக்கு நிதானம் தவறுகிறது. உருண்டோடிய குடத்தைக் கையிலெடுக்கிறாள். பூரணம்பிள்ளையை நெருங்குகிறாள். கூடவே அவளோடு வாணியும், தங்காவும்!

"இனி ஏதாவது பேசினால், இந்தக்குடம்தான் உன் தலையோட பேசும்..."

பூரணம்பிள்ளை இதை சற்றும் எதிர்பார்க்காத நிலையில், அவமானத்தைச் சுமந்தபடி... அந்த இடத்தை விட்டு நகர, ரதி துலாக் கொடியைப் பற்றிப்பிடிக்கிறாள்.

இக்கதைமூலம் ஆசிரியர் ஒரு விடயத்தைத் தெளிவாக முன் வைக்கிறார். எந்தவொரு அராஜகச் செயற்பாடுகளுக்கு எதிராக, தனிநபரோ அன்றி தனி அமைப்போ எழுந்து போராடுவதைவிட, அனைத்தும் ஓரணியில்இணைந்து போராடுவதானது பலனைத்தரும்... என்பதையே.

ரதி ஒரு தனிநபராகக் காட்டப்படுகிறது. வாணியும்தங்காவும் ஆதரவளிக்கும் அமைப்புகளாக கொள்ளப்படுகிறது. பூரணம்பிள்ளையும் அவரது செயல்களும் அராஜ களமாகச் சித்திரிக்கப்படுகிறது. போராட்டத்துக்கு ஒருமித்த ஆதரவு(தங்கா, வாணி) இருந்தால்தான், வெற்றிக்கான இலக்கை (துலாக்கொடி) அடைய முடியும்... என்பதை ஆசிரியர் பூடகமாக வெளிப்படுத்தியிருக்கிறார்போலும்.

## படைப்பாளி

விமர்சனமென்பது
எழுத்தாளனின் அணிகலன்.
தனது எழுத்தில் அழகியலை
வலிந்து புகுத்தாது எழுதும்
முறையில் கையாள்பவனே
சிறந்த படைப்பாளி.
தனது படைப்புகளுக்கு
வரும் விமர்சனங்களை
நல்லதோ கெட்டதோ
ஏற்று ஜீரணிப்பவனே சிறந்த
பக்குவப்பட்ட படைப்பாளியாக
முடியும். மக்களோடு மக்களாக
அவர்களின் பிரச்சினைகளை
உள்வாங்கி அதை அழகான
வடிவத்தில் அவர்களுக்குக்
கொடுத்து பிரமிக்கச்
செய்பவனே அதி சிறந்த
படைப்பாளியாவான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை

-மு.தயாளன் -



மிஸ் பொன்னம்பலத்திற்குப் பதவி உயர்வு கிடைத்தமை மறு நாள் பாடசாலையில் பெரிய கதையாகக் கதைக்கப்பட்டது. அதுவும் கபிலனின் சிபாரிசில் தான் கிடைத்தது என்ற கதை, சாந்தா ரீச்சரின் காதுக்குப் போன போது யாரோ தன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்தியதுபோல் துடித்தாள். அவள் மட்டுமல்ல கபிலனுக்கு நெருக்கமான வசந்தியால் கூடத் தாங்க முடிய வில்லை. மிஸ் பொன்னம்பலம் அழகான பெண்ணே. தன் வேலையில் பற்றுறுதியோடு கடமையாற்றும் ஒரு ஆசிரியைதான். வயதும் அவ்வளவாக இல்லை.



இதுவரை நாளும் கபிலனையும் வசந்தியையும் சேர்த்துக் கதைத்த அதே ஆசிரிய சமூகம் இப்போ மிஸ் பொன்னம்பலத்தோடு சேர்த்துக் கதைக்கத் தொடங்கி விட்டது.

மிஸ் பொன்னம்பலத்தின் இயற்கைப் பெயர் மகாலட்சுமி. எல்லோரும் அவளை மகா என்றே கூப்பிடுவர்.

இவர்கள் இப்படிக் கதைத்த போதும் மகா பொருட்படுத்தவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதைக்கு எண்ணெய் ஊற்றி வளர்த்துக் கொண்டிருந்தது சாந்தா தான்.

மகா உடுப்பிட்டியைப் பிறப்பிட மாகக் கொண்டவள். கொழும்பு பல்கலைக் கழகத்தில் தன் பட்டப்படிப்பை முடித் திருந்தாள்.

கபிலனுக்கு இதனால் நிரம்பிய மனக் கவலை. தன்னால் இரு இளம் பெண்க ளின் பெயர் கெடுவதை அவனால் தாங்கமுடியவில்லை.

அதிபரிடம் சென்று தன் மனக் குமுற லைக் கொட்டித் தீர்த்தான்.

அதிபர் எல்லாவற்றையும் அமைதி யாகக் கேட்டுவிட்டு "நான் எதிர் பார்த்ததுதான் கபிலன். இப்படிப் பல பிரச்சினைகள் வரும். எதிர் கொண்டு முன்னால் போக வேணும. நான் ஏற்க னவே மகாவோடு கதைத்து விட்டேன். மகா தைரியமான பெண். வெகு சாதார ணமாக தனக்கு இவை எந்தத் தாக்கத்தை யும் ஏற்படுத்தவில்லை என்று கூறி விட்டா. கவலையை விடும்" என்று கபிலனைத் தட்டிக் கொடுத்து அனுப் பினார்.

அதிபர் அறையைவிட்டு வெளியே வந்த கபிலன் நேரே தன் வகுப்பறைக்குச் சென்றுவிட்டான்.

பத்தாம் வகுப்பிற்கான பௌதிக பாடத்தை முடித்துவிட்டு வெளியே வந்த கபிலனுக்கு வேறு ஒரு பிரச்சினை காத்திருந்தது.

இந்தப் பிரச்சினைபற்றி அவனுக்குக் கூறியது உதவி அதிபர். பத்தாம் வகுப்பி லுள்ள பிள்ளையொன்றின் தகப்பன் பாடசாலைக்கு வந்ததாகவும் கபிலனால் திருத்திக் கையளிக்கப்பட்ட பௌதிக விடைத்தாளை கபிலன் முறையாகத் திருத்தவில்லை என்றும் அதனால் தனது மகள் மற்றப் பிள்ளைகளைவிட குறைவான மார்க்குகள் வாங்கியுள் ளதாகவும் அதிபரிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார் என உப அதிபர் அவ னுக்குக் கூறிவைத்தார். யார் பிள்ளை என்று கபிலன் கேட்க அதிபர் கூப் பிட்டுக் கதைக்கும்போது கூறுவார் எனக் கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

இன்று வந்த நேரம் தொடக்கம் ஒரே பிரச்சினையாக உள்ளது என கபிலன் கவலைப்பட்டான். எதற்கும் அதிபர் கூப்பிடும்போது போய் கதைப்போம் என மனதுள் நினைத்துக் கொண்டு அடுத்த வகுப்பிற்குப் போய்விட்டான்.

வகுப்பறையில் இருந்தாலும் அவனால் மனதை ஒரு நிலையில் வைத்துப் படிப்பிக்க முடியவில்லை.

அந்த வகுப்பு உயர்தர வகுப்பு. பாடம் பிரயோக கணிதம் . அந்த வகுப்பில் ஏழு பிள்ளைகளே இருந்தனர். ஏழு பேரும் பெண்பிள்ளைகள்.

அவர்களைக் கணக்குச் செய்யும்படி கூறிவிட்டு சிந்தனையிலாழ்ந்திருந்தான். மனம் திரும்பத் திரும்ப அதிபர் எப்போ கூப்பிடுவார் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தது.

இவனுடைய இந்த நிலையை அவதா னித்த பிள்ளைகள் " சேர், ஏதும் பிரச்சி னையோ?" என ஒரு பெண் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலன் அவர்களைப் பார்த்து "ஒன்றும் இல்லை. நீங்கள் கணக்குச் செய்வதில் கவனம் செலுத்துங்கோ" என்று கூறி விட்டு மேலும் கீழும் பார்த்து யோசித்துக் கொண்டிருந்தான்.

இதற்குப் பின் அவர்களும் அவனைத் தொந்தரவு செய்யவில்லை.

அந்தப் பாடம்தான் அன்றைய கடைசிப் பாடம். அதிபர் அவனைக் கூப்பிட வில்லை.

வெளியில் மழை சோவெனக் கொட்டிக் கொண்டிருந்தது. மழை நிலத்தில் விழுந்து தெறிக்கும் போது அதனைப் பார்த்து மெதுவாகச் சிரித்தான் கபிலன். அவனுடைய வாழ்விலும் எத்தனை பிரச்சினைகள் வருவதும் தெறிப்பதுமாக இருக்கின்றன என்பதை நினைத்தபோது தான் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

பாடசாலை முடிவதற்கான மணி அடித்தது. இன்னும் அதிபர் கூப்பிட வில்லை.

எட்டிப் பார்த்தான். அதிபர் வெளியில் போய்க் கொண்டிருந்தார்.

கபிலனும் வீடு போவதற்குத் தயாரான போது வழக்கமாக அவனோடு வரும் வசந்தியை இன்னும் காணவில்லை. சிறிது நேரம் காத்திருந்தான். மழை விடுவதாகவில்லை. போவதற்கு எழும்பியபோது வசந்தி குடை பிடித் தபடி வெளியே போய்க் கொண்டிருந் தாள். அவனுக்கு வியப்பாக இருந்தது. எல்லாமே இன்று புதிதாகவிருந்தது.

'சரி நாமும் போவோம்' என நினைத்து தன்னுடைய பையை எடுத்துக் கொண்டு மழையில் நனைந்தபடி நடக்கத் தொடங்கினான். சிறிது தூரம் சென்றதும் பின்னால் இருந்து " சேர்.. சேர் " என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது அவனுடைய உயர்தா வகுப்பு மாணவி குடையோடு ஓடி வந்து கொண்டிருந்தாள். வந்தவள் மூச்சிரைத் தபடி " சேர், இந்தாங்கோ குடை.. இதைப் பிடிச்சுக் கொண்டு போங்கோ." இது கபிலன் எதிர் பார்க்காத ஒன்று.

அவனுக்கு என்ன கூறுதென்று புரிய வில்லை. எதுவும் கூறாமல் குடையை வாங்கிக் கொன்டு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டான்.

இன்று எல்லாமே புதிதாகவே இருக் கிறதென்று மனதுள் நினைத்துக் கொண்டு அறையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அறைக்கு வந்த அவனுக்கு இன்னுமொரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அவன் இருந்த வீட்டை அண்மித்தபோது அவனுடைய அறைக்குள் யாரோ இருப்பதையும் அந்த யாரோவுடன் அவன் நண்பன் கதைத்துக் கொண்டி ருந்ததும் தெரிந்தது.

அந்த யாரோ வேறு யாரும் இல்லை. அவனுடைய அப்பாதான் வந்திருந்தார். கபிலனுக்கு ஆச்சரியமாகவிருந்தது.

அறைக்குள் வந்த கபிலன்,

" என்ன அப்பா சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறியள் " என்றான்.

" இல்லைத் தம்பி .. வேறொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலாய் வந்தனான். உன்னையும் பார்த்திட்டுப் போவம் என்று வந்த னான்" என்றார்.

தன்னுடைய நண்பர் வீட்டில் நிற்பதாக வும் கூறிய அவர் தொடர்ந்து அவன் கலியாணத்தைப்பற்றிக் கதைத்தார். கபிலன் உடனடியாகவே மறுத்து விட் டான். "நான் இன்னும் சாதிக்க வேணும். இப்ப அவசரப்பட வேண்டாம்" என்று கூறிவிட்டான்.

அதற்குப் பின் அவர் எதுவும் கதைக்க வில்லை.

சிறிதுநேரம் இருந்து மூவரும் கதைத்து விட்டு சாப்பிடுவதற்காக புறப்பட்டனர். கபிலன் வழக்கமாகச் சாப்பிடும் காந்தி லொட்சிற்குச் சென்றனர். இவர்கள் கடைக்குப் போய்க் கொண்டிருக் கும்போது எதிர்பாராதவிதமாக இவர் கள் செல்லும் பாதையில் வசந்தி வருகிறாள்.

வசந்தியை நண்பர்கள் இருவருக்கும் தெரியும். பாடசாலைவிட்டு வழமையாக கபிலனோடு வரும் வசந்தி வரவில்லை. அது கபிலனின் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. அவளைக் கண்ட வுடன் தகப்பன் தங்களோடு வருவ தையும் மறந்து

" என்ன வசந்தி இண்டைக்குப் பள்ளி யாலை வெள்ளெனப் புறப்பட்டு விட் டீர்" என்றான் கபிலன்.

வசந்தி பதில் கூற முன்பு, தன்னுடன் தகப்பன் உள்ளதை நினைவுபடுத்திய கபிலன்

" வசந்தி, இவர் என்னுடைய அப்பா" என்று அவரை அறிமுகப்படுத்தினான். அதைத் தொடர்ந்து

" அப்பா, இவ பெயர் வசந்தி என் னோடை படிப்பிக்கிறா. இவதான் எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்திலை வேலை இருக்கென்று கூறினவ என முந்திச் சொன்னன்" என்று அவன் கூற அவரும்

" ஓ.. அந்தப் பிள்ளையே. நன்றியம்மா" என்று கூறினதோடை விடாமல்

" யாழ்ப் பாணத்திலை எந்த ஊரம்மா?" என்று கேட்டார்.

இதற்குள் கதையை வளர்த்தவிடாமல் " சரி வசந்தி நீங்கள் போட்டு வாங்கோ நாளைக்கு பள்ளிக்கூடத்திலை சந்திப் பம்" என்று கூறி அவளை அனுப்பி வைத்து விட்டான் கபிலன். இந்த நாடகங்களையெல்லாம் நன்றாக ரசித்துக் கொண்டே வந்தான் கபிலனின் நண்பன்.

கபிலனின் அப்பா மனதில் வசந்தியை யிட்டுக் குழப்பம் உருவாகத் தொடங்கி விட்டது. கடையில் சாப்பிடும்போதும் வசந்தியைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார்.

(இன்னும் வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனச்சாட்சி பேசுமா?

"பீப், பீப்" கோபத்துடன் ஹார்னை வேகமாக அழுத்தினான் கோபி. முன்னாலிருந்த கார் மெது வேகத்தில் உருண்டு கொண்டிருந்தது. சென்று கொண்டிருந்த ஒற்றைப் பாதையில் அந்தக் காரை விலத்திக் கொண்டு முன்னால் செல்லவும் வழியில்லை. தேவையற்று ஹாரனை அடிக்கக் கூடாது என்ற விதி தெரிந்திருந்த போதும் கோபிக்கு வேறு வழியிருக்க வில்லை. இன்னமும் பதினைந்து கிலோமீற்றர் தொலைவுக்கு இந்தக் காருக்குப் பின்னால் ஊர்ந்து கொண்டு சென்றால் வீட்டுக்குச் சென்று சேர ஒரு மணித்தியாலத்துக்கு மேல் எடுத்துக் கொள்ளும். இப்போதே 'பவி' ஐந்து தடவைகளுக்கு மேல் அழைப்பு எடுத்து விட்டாள். இன்றைக்கு மாலை ஆறு மணி காட்சிக்குப் படம் பார்க்கச் செல்வதாக இருவரும் பேசி வைத்திருந்தார்கள். இன்றைக்கென்று பார்த்து வேலை முடிவதாயில்லை. வாடிக்கையாளர் ஒருவருக்கு



**சியாமளா யோகேஸ்வரன்**

நேற்றைய தினம் போல் இன்றைக்கும் சண்டை வந்து விடக்கூடாதே என்று தான், திட்டமிட்டு வேலைகளை முடித்திருந்தான். திருமணமான புதிதில் இப்படி அடிக்கடி சண்டைகள் வந்து விடுவதில், ஏண்டா திருமணம் செய்து கொண்டோம் என்று அடிக்கடி தோன்றத் தொடங்கி இருந்தது. அது நல்லதல்ல என்பது புரிந்ததால், இனி அநாவசியமாய் எந்தப் பிரச்சனைகளையும் வரவிடுவதில்லை என்று தீர்மானித்திருந்தமைக்கு ஆயுள் ஒருநாள் தான் போலிருக்கிறதே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைக்குள் அனுப்ப வேண்டிய கட்டடக்கலை வரைபடத்தை மாலைக்குள் அனுப்பி விடுமாறு தலைமைப் பொறியியலாளர் காலைக் கூட்டத்தின் போதே கூறி விட்டிருந்தார்.

மதிய உணவுக்குக்கூடச் செல்லாமல், நான்கு மணியளவில் வேலையை முடித்து வாடிக்கையாளருக்கு வரைபை அனுப்பி வைத்து விட்டான். இன்னும் ஒரு அரை மணி நேரத்தில் வீட்டுக்குக் கிளம்பி விடலாம் என்று காத்திருந்த நேரத்தில் மறுநாள் தொடங்க இருக்கும் அந்தக் கட்டடப் பணியில் சிறிய ஒரு மாற்றத்தைக் கோரி பதில் மடல் வந்திருந்தது. அதைப் பார்க்காதது போன்று கிளம்ப வழியிருக்கவில்லை. அதே மடலின் பிரதி மேலதிகாரிக்கும் அனுப்பப்பட்டிருந்ததில் அவர் போனில் அழைத்து தேவையான மாற்றத்தை முடித்து விடுமாறு சொல்லியிருந்தார். வேலை ஒன்று எடுப்பது எவ்வளவு குதிரைக் கொம்பு என்பது அவனுக்குத் தெரியும். அதைவிட அவனுடன் வேலை செய்பவர்கள் அனைவருமே திறமையாளர்கள். திறமையாக வேலை செய்தால் தான், அவர்களுடன் போட்டியிட்டு அடுத்த நிலைக்குப் போக முடியும் என்ற கட்டாயம் இருக்கிறது. பதவியுயர்வு ஒன்று கிடைத்தால் தான், மணம் முடித்த பின்னர் அதிகரித்து விட்டிருக்கும் பொருளாதார சுமையைத் தாங்கிக் கொண்டு கொஞ்சமாவது எதிர்காலத்துக்கென சேமித்து வைக்க முடியும் என்ற தேவையும் இருந்தது.

நான்கு வருடங்களாகப் பவியைக் காதலித்த போது எந்தக் கஷ்டமும் தெரியவில்லை. தூரத்தில் இருந்ததால், அவ்வப்போது தான் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு மட்டுமே கிடைத்திருந்தது. அன்பைப் பரிமாறிக் கொண்டதைத் தவிர வேறு எந்தப் பெரிய பிரச்சனைகளும் அவர்களிடையே அப்போது வந்து விடவில்லை. இப்போதானால், தினமும் ஏதாவது ஒரு பிரச்சனை எங்கிருந்தாவது முளைத்து வந்து விடுகின்றது.

கோபிக்கு தனியே வாழ்ந்ததில் நன்றாகச் சமைக்கத் தெரியும். தனியே இருந்த வரை உடுப்புகளைத் தோய்த்து, அவற்றை அயன் பண்ணி, வீட்டைச் சுத்தம் செய்து, தனக்கான சமையல்களை தானே செய்து வாழ்ந்து கொண்டிருந்தான். பவி வந்த புதிதில் வீட்டு வேலைகள் யாவையும் கவனித்துக் கொண்டு, ஒரு பொறுப்பான இல்லத்தலைவியாக நடந்து கொண்டாள். கோபியை எந்த வேலையையும் செய்ய விடாமல் பார்த்துக் கொண்டதில், அவனும் அதற்குப் பழகிக் கொண்டு விட்டான்.

திருமணத்தின் பின் பவி தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு கோபி வாழ்ந்து வந்த பிறிஸ்பேனுக்கு வந்து சேரந்திருந்தாள். கடந்த சில மாதங்களாக வேலை தேடி விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்புவதும், நேர்முகத் தேர்வுகளுக்காகச் செல்வது மாக அவளது பொழுது கழிந்து கொண்டிருந்ததே தவிர இன்னமும் வேலை கிடைத்த பாடில்லை.

கோபி வீட்டு வேலைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்தாலும் பூசல்கள் உருவாகத் தான் செய்தன. எதுவும் பேசக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என்று நினைத்து வைத்திருந்தாலும் வாக்குவாதத்தின் ஒரு கட்டத்தில் இவனது பொறுமை பறந்தோடித்தான் விடுகின்றது. பவித்ரா எங்கிருந்துதான் பிரச்சனைகளைக் கண்டு பிடிக்கிறாள் என்பதுதான் கோபிக்குப் பெரிய சந்தேகமாக இருந்தது. நேற்றைய தினம் கூட நன்றாகத் தான் போய்க் கொண்டிருந்தது.

" கோபி, நாளைக்கு வெளியில் எங்காவது போகலாமா?" பவி ஆரம்பித்தாள்

"வெள்ளிக்கிழமை தானே? கோயிலுக்குப் போகலாமா?" கோபி யதார்த்தமாகத் தான் கேட்டான்.

"ஒரு சதமும் உழைத்துத் தரவில்லை என்று குத்திக் காட்டுகிறீர்களா?"

பவி ஏன் அப்படிச் சொல்கிறாள் என்பது கோபிக்குப் புரியவில்லை.

"ஏன் இப்ப தேவையில்லாமல் தொடங்குறாய்? நான் அப்படிச் சொல்லவே இல்லையே?"

"சாப்பிட வெளியில் போகலாம், ஒரு படம் பார்க்கப் போகலாம். செலவே இல்லாமல் கோயிலுக்குப் போய் விட்டு வரலாம் என்று சொல்கிறீர்கள், அப்படித்தானே?"

"பவி, தேவையில்லாமல் எல்லாம் கற்பனை பண்ணாதே, நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை, சரி நீயே சொல்லு, எங்கே போகலாம் என்று?"

"வீட்டில் சும்மா இருக்கிறேன் என்பதால் கற்பனை உலகத்தில் வாழ்கின்றேன் என்கிறீர்களா? நல்ல வேலையை விட்டு விட்டு உங்களுக்கு பின்னால் வந்தேன் பாருங்கள். எனக்கு இது தேவைதான். மற்றவர்கள் தம் பெண்டாட்டிமாரை எங்கெல்லாமோ கூட்டித் திரிகிறார்கள். உங்களுக்கு என்னில் கொஞ்சமும் பாசம் இல்லை?" பவி முறைத்துக் கொண்டே சொல்ல பிரச்சனை வளரப் போகின்றது என்பது மட்டும் கோபிக்குப் புரிந்தது.

ஒருவாறு அவளைச் சமாதானப் படுத்திச் சாப்பிட வைத்து, மறுநாள் படம் பார்க்கப் போவதற்குச் சம்மதிக்க வைத்தான். அதற்குள் இரண்டு மணி நேரம் ஓடிவிட்டதுடன், பரிசாகத் தலை வலியும் வந்து விட்டிருந்தது.

நேற்றைய தினம் போல் இன்றைக்கும் சண்டை வந்து விடக்கூடாதே என்று தான், திட்டமிட்டு வேலைகளை முடித்திருந்தான். திருமணமான புதிதில் இப்படி அடிக்கடி சண்டைகள் வந்து விடுவதில், ஏண்டா திருமணம் செய்து கொண்டோம் என்று அடிக்கடி தோன்றத் தொடங்கி இருந்தது. அது நல்லதல்ல என்பது புரிந்ததால், இனி அநாவசியமாய் எந்தப் பிரச்சனைகளையும் வரவிடுவதில்லை என்று தீர்மானித்திருந்தமைக்கு ஆயுள் ஒருநாள் தான் போலிருக்கிறதே?

எண்பது என்று வேகம் காட்டினாலும், ஐம்பதைத் தாண்ட மாட்டேன் என்று முன்னால் மெதுவாக ஓடுபவனை என்ன செய்வது என்று தெரியவில்லையே? எதற்காக தெருவில் காரோட வந்து மற்றவர்களின் உயிரை எடுக்கிறானோ தெரியவில்லையே? இதை விட இறங்கி உருட்டினால் கூட வீட்டுக்குப் போய் விடக் கூடுமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தைப் பார்த்தான். ஐந்தரை யைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஐந்து அழைப்புக்கள் பவியிடம் இருந்து வந்து விட்டிருந்தன. எடுத்தால் நிச்சய மாக இவனைக் குறை சொல்லித் திட்டத் தான் போகின்றாள் என்பதால் வந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. எப்படியும் நேரத்துக்குப் போய்ச் சேர முடியாது. இன்னுமொரு புயலை எதிர் கொள்ள வேண்டியது தான். பெருமூச்சு ஒன்று கொஞ்சம் நெடியதாகவே வெளியேறியது.

"பீப், பீப்." ஆத்திரம் தாங்காமல் இன்னுமொரு முறை அடித்தான். எந்தச் சலனமும் இல்லாமல் கார் அதே வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. முன்னால் செல்பவனை எத்தனை முடியுமோ, அத்தனை திட்டிக் கொண்ட தில் இரத்த அழுத்தம் வேறு அதிகரித்து விட்டதாய் தோன்றியது.

இன்னும் மூன்று கிலோமீட்டர் தான். அதன் பின்னர் பாதை இரண்டா கப் பிரிந்து விடும். முன்னால் எடுத்துக் கொண்டு ஓடி விடலாம். பல்லைக் கடித்துக் கொண்டு வண்டியோட் டினான். பின்னால் ஒரு பெரிய வாகனத் தொடர் வந்து கொண்டிருப்பது கண் ணாடியில் தெரிந்தது.

முன்னால் இரண்டு பாதைகளாக வீதி தெரிய அப்பாடா என்று இருந்தது. தொலைபேசி கிணு கிணுக்க திரை "பவி டார்லிங்' என்று சொன்னது.

பதிலளித்து "அரை மணியில் வந்து விடுகின்றேன்" என்று சொல்லி விட்டு வைக்க முன்னர், பவி மறுமுனையில் கத்தத் தொடங்கி விட்டாள்.

எல்லாம் முன்னால் செல்பவனால் வந்தது என்று நினைக்கையில் ஆத்திரம் பொங்கியது. பின்னால் வந்து கொண் டிருந்த வாகனங்கள் முன்னே சென்று விட்டிருக்க, பின்னால் எந்த வாகனங்க ளையும் காணவில்லை. முன்னால் செல்பவனுக்கு ஒரு பாடம் கற்பித்து விட்டுப் போக வேண்டும் என்பது போல் ஒரு வெறி. காரை அடுத்த பாதையில் விட்டு எடுக்க முன்னர், முன்னால் சென்று கொண்டிருந்த காரை இடிப்பது போன்று மிக மிக அருகா மையில் கொண்டு சென்றான்.

அடுத்த நொடி அவன் எதிர்பாராத ஒன்று நடந்து விட்டிருந்தது. அந்தக் காரோட்டி கோபியின் காருடன் இடிபடுவதைத் தவிர்க்க காரைப் பக்கவாட்டில் ஒடித்ததில் தன் கட்டுப் பாட்டை இழந்திருக்க வேண்டும். கார் பக்கத்திலிருந்த புல் தரையினூடு சறுக்கிக் கொண்டு பக்கத்திலிருந்த ஆற்றை நோக்கிப் போய்க் கொண்டி ருந்தது. கோபியின் இதயத் துடிப்பு ஒரு நொடி நின்று போனது. தனது காரை அவசரமாக நிறுத்தி விட்டு, இறங்கி ஓடினான். காரை ஓடிச் சென்று பிடித்து நிறுத்த வழியில்லாது திணறிக் கொண்டிருக்கையில் கார் ஆற்றுக்குள் சென்று மறைந்தது.

தன் காருக்கு ஓடி போனைக் கையில் எடுத்தவன் 000 அழுத்தி நடுங்கும் குரலில் நடந்ததைச் சொல்லி முடித்து விட்டு மூழ்கி விட்ட காரை நோக்கி ஓடினான். காருள் வயதான ஒரு பெண்மணியும் ஒரு சிறுபெண்ணும் இருப்பதைக் கவனித்ததும் காரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவைத் திறக்க முயற்சி செய்தான். அது முடியாமல் போகவே பக்கத்தில் ஏதாவது பாரமான பொருள் இருக்கின்றதா என்று தேடினான். ஒன்றையும் காணவில்லை. தண்ணீருக்குள் மீண்டும் முங்கிப் பார்த்தபோது வயதான பெண்மணியிடம் எந்த அசைவும் இருக்கவில்லை. சிறுவர்களுக்கான பாதுகாப்பு இருக்கையில் இருந்த சிறுமி தன்னை விடுவித்துக் கொண்டு கதவில் அடித்துக் கொண்டிருந்தாள்.

“இறைவா, இவர்களைக் காப்பாற்றிக் கொடுத்து விடு.” இறைஞ்சியவாறே கையில் இருந்த மரக்கட்டையால் சிறுமி இருந்த பக்கத்துக்கு அடுத்த பக்கமாக இருந்த காரின் ஜன்னலை அடித்தான். தண்ணீருள் நினைத்த வேகத்துக்கு அடிக்க முடியவில்லை. ஆனாலும் ஜன்னல் ஒரு கட்டத்தில் உடைய, சிதறலுக்கால் கையை விட்டு காரின் பிடியை உட்பக்கமாக திருகித்திறந்தான்.

தண்ணீர் இப்போது குபுக்கென்று உள்ளே நுழைந்தது. சிறுமியை அலாக்காகத் தூக்கி வெளியே வருவதற்குள் தீயணைப்பு மீட்பு வண்டி, அம்புலன்ஸ் மற்றும் காவற்துறை வாகனங்கள் வந்து விட்டிருந்தன. சிறுமியைப் படுக்கவைத்து அவள் குடித்திருந்த நீரை வெளிக்கொணர முதலுதவி செய்து கொண்டிருந்தார்கள்.

வயதான பெண்மணியை வெளியே கொண்டு வந்திருந்தார்கள். கூடியிருந்தவர்களுக்கு தெரியாமல் மறைப்புப் போடப்பட்டு ஏதோ செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வயதான பெண்மணிக்கு உயிர் இருக்கின்றதா இல்லையா என்பதை அறிய கோபியின் ஒவ்வொரு அணுவும் துடித்துக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் தெப்பலாக நனைந்திருக்க, குளிரிலும், அச்சத்திலுமாய் உடல் நடுங்கியது.

உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை யாரும் சொல்ல மாட்டார்களா என்று கோபியின் மனம் அல்லாடிக் கொண்டிருக்க காவற்துறையினர் நடந்த விபரங்களைப் பற்றி கோபியிடம் கேட்கத் தொடங்கினார்கள்.

நடந்ததை உள்ளபடி சொல்ல கோபிக்குத் தயக்கமாக இருந்ததில், தான் பார்த்ததையும் காப்பாற்றியதையும் பற்றி மட்டுமே சொன்னான். காவற்துறையினர் அவனைச் சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை. அவனுடைய விபரங்களை மட்டும் பதிந்து கொண்டனர்.

அம்புலன்ஸ் அந்தப் சிறுபெண்ணையும், வயதான பெண்மணியையும் ஏற்றிக் கொண்டு பறந்து விட, கூடியிருந்தவர்கள் சிறிது சிறிதாக கலையத் தொடங்கினார்கள்.

கோபி அடுத்ததாக என்ன செய்வது என்று தெரியாதவனாய் பித்துப் பிடித்தது போன்று நின்று கொண்டிருந்தான். கையைக் குலுக்கிய காவல் துறை அதிகாரி என்னமோ சொல்லி விட்டு மீண்டும் சந்திப்பதாகச் சொன்னது மட்டும் அரைகுறையாக மூளைக்கு எட்டியது.

காரில் போய் ஏறி அமர்ந்து கொண்ட போதும், காரை ஸ்டார்ட் செய்ய முடியவில்லை. அதற்குள் பவியின் அழைப்பு வர, போனை பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கைக்கு தூக்கி எறிந்தான். எத்தனை தரம் அழைத்திருந்தாளோ தெரிய வில்லை.

பத்து நிமிடம் அப்படியே அமர்ந்தி ருந்தவன், காரை மெதுவாக ஸ்டார்ட் செய்தான். கார் ஆமை வேகத்திலேயே நகர்ந்தது. வேகமாக ஓட்டவே அவ னுக்கு முடியவில்லை. பின்னால் வந்த வாகனங்கள் எல்லாம் ஹோர்ன் அடித் தபடி முந்திக் கொண்டு சென்றதைப் பற்றி அவன் எந்த அக்கறையும் கொள்ள வில்லை.

எப்படியோ வீட்டை சென்று சேர்ந் தவன், காரை வெளியிலேயே விட்டு விட்டு கதவைத் தட்டினான். சற்று நேரத்துக்குப் பிறகு கதவு திறக்கப்பட,

"என்னைப் பார்த்தால் பைத்தியக்காரி போலத் தெரியுதா?" என்ற பவியின் கூச்சலுக்கு எந்தப் பதிலும் இல்லாமல் அவள் முகத்தையே பார்த்தான்.

அதற்குள் கோபியின் முகத்தைக் கவனித்து விட்ட பவி.

"என்ன நடந்தது கோபி? ஆர் யு ஆல்ரைற்?" என்று கேட்க பதிலேதும் சொல்ல முடியாமல் அப்படியே நிலத் தில் விழுந்து அழத் தொடங்க, பவி பயந்தே போனாள்.

கோபியின் தலையை எடுத்து மடி யில் தாங்கிக் கொண்டவள் என்ன நடந்தது என்று பல முறை கேட்டும் கோபியால் பதில் பேச முடியவில்லை. பவி பலவந்தமாய் பருக்கிய கோப்பியைக் குடித்து விட்டு, சற்றுத் தெம்பு வந்த வனாய் நடந்தவற்றைச் சொல்லி முடித்தான்.

ஏதோ சொல்ல வாயெடுத்த பவி ஏதோ குற்ற உணர்ச்சியால் வாயை மூடிக் கொண்டாள். கோபி இரவு பூரா வும் தூங்கவேயில்லை. அதிகாலையில் சற்றுத் தூங்கி விட்டு விழித்தவனுக்கு வேலைக்குப் போக முடியும் என்று தோன்றவில்லை. நடந்ததை சுருக்கமாகக் குறிப்பிட்டு, ஒரு வார விடுமுறைக்கு விண்ணப்பித்தான். வேலையைப் பற்றியோ, திருமண வாழ்க்கையைப் பற்றியோ ஒரு துளி எண்ணமும் தோன்ற வில்லை. குடைந்து கொல்லும் நினைவு களிலிருந்து என்னை யாராவது மீட்டு எடுத்து விட மாட்டார்களா என்றே அவன் மனம் ஏங்கியது.

காலை எட்டு மணிக்கு காவற்துறை யினரின் வண்டி வெளியில் வந்து நின்ற போது, தன்னைக் கைது செய்து அழைத்துப் போனால் கூட பரவா யில்லை என்றே தோன்றியது.

நடந்தவற்றை விளக்கமாகக் கேட்டுக் குறித்துக் கொண்டவர்களிடம், தான் செய்த செயல் பற்றி மட்டும் மூச்சே விடவில்லை. காரில் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று அவன் தவிப்புடன் கேட்ட போது,

அந்த வயதான பாட்டி அந்தச் சிறுமியின் பாட்டி என்றும், பாட்டியின் மகள் தனிப் பெற்றோராய் அந்தப் பெண்மணியை வளர்த்து வந்தாள் என்றும், அவளும் குடிபோதையில் ஒரு விபத்தில் இறந்து போக இந்தப் பாட்டியே அந்த சிறுமியை வளர்த்து வந்தார் என்றும் பொலிசார் கூறினார்.

"அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே?"

"துரதிஷ்டவசமாக பாட்டி இறந்து போனார். சிறுமி மட்டும் பிழைத்துக் கொண்டாள்" என்ற போது கோபிக்குக் கண்கள் இருட்டிக் கொண்டு வருவது போன்று தோன்றியது.

"நீங்கள் ஒரு நல்ல மனிதர், அந்த சிறுமியின் உயிரைக் காப்பாற்றி இருக்கிறீர்கள், உங்களுக்கான பாராட்டும் வெகுமதியும் விரைவில் கிடைக்கும்." காவற் துறை அதிகாரி சொல்லி விட்டுக் கிளம்பி விட்டார்.

என் அவசரத்துக்காக ஒரு உயிரைக் கொன்று விட்டேனே? கோபியின் மனம் அவனைக் கொல்லத் தொடங்கியது. யாருமில்லாத அநாதையாய் அந்தச் சின்னப் பெண் போய் விடுவாளோ என்றெண்ணுகையில் குற்ற உணர்ச்சி உள்ளுக்குள் குடையத் தொடங்கியது.

ஒரு நிமிட நேரப் பைத்தியக்காரத்தனமான எண்ணம் என் வாழ் நாள் முழுவதும் உறுத்தக் கூடியதான ஒரு சம்பவத்துக்கு இழுத்துச் சென்று விட்டிருக்கின்றதே? வயதான காலத்தில் மெதுவாகத் தானே அந்த பெண்மணியால்வண்டியோட்ட முடிந்திருக்கும். வீட்டில் போரடித்துப் போயிருக்கும் சிறுமியை அழைத்துக் கொண்டு வெளியில் கிளம்பியிருப்பாரா? கண் முன்னால் நடந்த இந்தக் கொடூர சம்பவத்தில் அந்தச் சிறுமியின் மனம் எவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கப்பட்டிருக்கும்? அவளை இனி யார் பார்த்துக் கொள்வார்கள்? ஒரு உயிரைக் கொன்று விட்டேனா? என் குடும்ப உறுப்பினர் ஒருவரை சந்தோஷப்படுத்த வேண்டிய அவசரத்தில், ஒரு சிறு குழந்தைக்கு எல்லாமாய் இருந்தவரை இல்லாமல் பண்ணி விட்டேனா? எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து அதைக் கொஞ்சும் போதோ அல்லது அது அப்பா என்று அழைக்கும் போதோ யாருமற்றவளாய் அரசாங்கத்தின் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அன்புக்காய் ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த முகம் தெரியாத குழந்தையின் ஞாபகம் வந்து என்னைக் கொல்லப் போகின்றதே?

மனம் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டது. பசி, தாகம் எதுவுமே இல்லாமல் போனது. மடங்கி இருந்தவனுக்கு அவனுடைய நண்பனின் அழைப்பு என்று பவி போனைக் கொடுத்தாள்.

"வாழ்த்துக்கள் கோபி, மனிதாபிமானமான செயலடா? உன்னை நினைக்கப் பெருமையாக இருக்கின்றது. செய்தியில் பார்த்தோம்டா."

அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் போனை நழுவ விட்டு விசும்பத் தொடங்கினான். கணவனைத் தேற்றும் வகை தெரியாமல் தானும் சேர்ந்து அழுதாள் பவி. கொஞ்ச நேரம் அழுதவன்,

"பவி, என்னை அந்தக் குழந்தையைக் பார்க்கக் கூட்டிக் கொண்டு போகிறாயா?" என்று கேட்டபோது பவிக்கு நன்றாகவே கணவனின் மனம் புரிந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்.

சிறுகதை மஞ்சரி 35 இன்
கதைகள்பற்றிய ஒரு பார்வை.
**- இதயராசன் -**

"நளாயினி ஒவ்வொரு கதையிலும் அந்தக் கதை நிகழும் களத்தை அப்படியே எம்முன் கொண்டு வருவதை நீங்கள் படிக்கும் போது அனுபவிப்பீர்கள்.

மனிதர்களின் உணர்வுகளை எழுத்தில் வடிப்பது இலகுவான ஒன்றல்ல. நளாயி னியின் பத்துக் கதைகளிலும் பத்துவிதமான பிரச் சினைகளை வெளிக் கொணர்ந் திருக்கின்றார்".

என்று, சிறுகதை மஞ்சரி ஆசிரியரின் முன்னுரையுடன், அதன் 35 வது இதழ் நளாயினியின் பத்துக் கதைகளைத் தாங்கியதாக வெளிவந்துள்ளது.

முற்றிலும் சிறுகதைக்காகவே வெளிவரும் மாத இதழில், விசேடமாக வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து, அறிமுகம் செய்யும் பணியின் அடுத்தகட்ட நகர்வாக, ஒரு இதழை முழுவதுமாக சிறுகதைத் தொகுப்பாகவே வெளியிட்டுள்ள இதழா சிரியர் திரு. மு. தயாளனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மல்லிகையின் 43வது ஆண்டு மலரில் 'மல்லிகையின் மொட்டுக்கள்' என்ற அறிமுகத்துடன் வெளியான 'தொடரும் காத்திருப்பு எனும் சிறுகதை மூலம் எழுத்துலகில் அறிமுகமாகியதாக, சிறுகதை எழுத்தாளர் நளாயினி குறிப் பிடுகின்றார்,

"நாம் அன்றாடம் காணும் மாந்தர்களின் நிலை. அவர்களின் சுமத்தலையும் வாழ் வையும் எழுத்தில் கொடுக்கும் அவாவின் காரணமாகவே எழுதுகின்றேன்."

இவரது பத்துக் கதைகளையும் வாசித்து முடித்தவுடன், மேலே நான் குறித்தவை யாவும் மிகவும் பொருத்தமாக இருந்தமையால், மேற்கோள் நீண்டதா யினும் குறித்துக் காட்டியுள்ளேன்.

அன்பு, பால் ரீ, தேவாங்கு ஆகிய மூன்று கதைகளும் மூன்று சிறுவர்களின் மூன்று விதமான பிரச்சினைகளைப் பேசுகின்றது.

முதலாவது கதை ஒரு முன்பள்ளிச் சிறுவனின் உளவியல் சிக்கலைச் சொல் கின்றது. குடும்ப வறுமை காரணமாக வெளிநாடு சென்ற தாயின் பாசத் திற்கான ஏக்கம், குடிகாரத் தகப்பனை அண்ட முடியாத வெறுப்பு, பாட்டியின் அரவணைப்பு ஒன்றே ஆறுதல் கொடுக் கின்றது. ஏழ்மையும், சமூக அந்தஸ்த்தும் ஏனைய சிறுவர்களிடமிருந்து தூரமாக வைக்கின்றது. அதனால் விரக்தியின் விளிம்பில் சிறுவன்.

ஒரு ஆசிரியைக்குரிய கடமையுடனும் தாய்மைக்குரிய பரிவுடனும் சிறுவனை அணுகும் ஆசிரியை சொல்வதாக,

"மெல்ல அவன் தலையை நீவுகிறேன்.. தாய்ப்பறவையின் இறகுச் சூட்டில் ஒதுங்க விளையும், செட்டை முளைக்காத சிறுகுஞ்சென என்னோடு ஒட்டிக் கொள்கிறான்."

என்ற வரிகள் 'அன்பு' என்ற மகுடத் திற்கு முத்தாய்ப்பாக அமைகின்றது.

ஒரு சிறுவனையும் அவனது அக்காவையும் தவிக்கவிட்டு மரணிக்கும் தாய், அச்சிறுவனிடம் 'அக்காவைத் தவிக்க விட்டுப் போகாதை' என்ற தாயின் இறுதி விருப்பத்தை மீறமுடியாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவின் புருஷன் செய்யும் கொடுமைக ளைத் தாங்கிக்கொள்ளும் சிறுவனின் கதையே 'பால் ரீ '.

'அக்கா குழந்தை பெற ஆஸ்பத்திரிக்குப் போயிட்டா. அந்நாள் வேறை ஒரு பெட்டையைக் கூட்டிக் கூட்டிக் கொண்டு வந்து... ச்சீ.. ச்சீ.. அதை எப்பிடி என்னால சொல்ல முடியும்?'

என்று கசிப்பு விற்கும் ஒழுக்கம் கெட்ட அக்கா பருஷன் பற்றிச் சொல்வ தும், இறுதியில் சிறுவன் தற்கொலை செய்ததாக ஊரை நம்பவைக்கும் மோசடியையும் நாசூக்காக சொல்வதும் சிறப்பு.

ஒரு சிறுமியின் நண்பனான சிறுவன் ஒருவன், கடைசிவரை அவளை விட்டுக் கொடுக்காத நல்ல நண்பனாகவே இருந்து, ஒரு நாள் அவன் காணாமல் போன நினைவுகளை அச்சிறுமி மீட்டு வதாகவே 'தேவாங்கு' கதை அமைந் துள்ளது.

முரட்டுத்தனமான தண்டனையால் முரடனாக மாறுவதும், அன்பைக் காட்டுவோரிடம் நெகிழ்வைக் காட்டுவ துமான உளவியலைத் துல்லியமாக வெளிக்காட்டுகின்றது. .

'நான் களவெடுப்பன் எண்டு நீ நினைக் கிறியோ தங்கம். அதுவரை நிலம் நோக்கிய அவன் விழிகள் என்னை நோக்கியது. அதில் நீயாவது என்னை நம்புவியா எனும் கெஞ்சல் தொக்கி நின்றது.'

திருடன் என்ற பழிச்சொல்லைச் சுமந்தபடி அச்சிறுவன் காணாமல் போனது எமக்கும் நெகிழ்வைத் தருகின் றது.

எழிலக்கா, ஒரு கையோசை, பகல் நிலவு, அவள் ஒரு தொடர் கதை, ஒரு பகல் ஓர் இரவு, மரணத்தின் வாழ்வு, பெண்ணியவாதி ஆகிய ஏழு கதைகளும் பெண்களின் குறிப்பாக பதின்மவயதினர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் சவால்களையுய் மிகுந்த நேர்த்தியுடனும் நிதானமாகவும் எடுத்துச் சொல்கின்ற கதைகளாகும்.

'அக்கா அலங்கோலமா வெளியில வந்தா.. தலைமுடியெல்லாம் கலைஞ்சு, உடுப்பெல்லாம் கசங்கித் தோள்பட்டை யால கிழிஞ்சு போயும் கிடந்தன... அக்காட உதட்டில ரத்தம் வேறு... எங் களைக் கண்ட அக்கா முகத்தை மூடிக் கொண்டு வீட்டுப் பின்பக்கம் ஓடி யிட்டா... அவவைத் தொடர்ந்து வெளியில வந்த அவவின்ர அக்கா.. புருஷன் எங்களைக் கண்டதும் நிலை குலைஞ்சு போனார்... "

எழிலக்கா என்ற கதையின் சாரம்சமே மேற்சொன்ன சிறுமியின் வாக்கு மூலமாகும். அக்காவின் பிரசவத்திற்கு உதவியாக வந்திருக்கும் தங்கைகளுக்கு நடக்கும் பாலியல் தொல்லைகளின் விளைவாக, என்ன ஏது என்றே தெரியாது கர்ப்பமாகும் பரிதாபத்தை வார்த்தைக ளில் விபரிக்கமுடியாது.

இதில் மிகக் கொடுமை என்னவென் றால் ஊருக்குத் தகப்பன் பெயர் தெரியா மல் பிறக்கும் மழலைகள் அனுபவிக்கும் கொடுமைகள்.

காதல் என்பது இரு பாலாருக்கும் பொதுவானது. ஆனால் அதிகபட்சமான துன்பத்தை இறுதிவரை சுமப்பது என்னவோ பெண்கள்தான்.

பருவ வயதின் பாலின ஈர்ப்பினில் சிக்குண்ட இளம்பெண்கள் தமது காதலை வெளிப்படையாகச் சொல்வ திலுள்ள தடைகளையும், அதிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்வதற்கான மனத்தடையினையும் மிக நுணுக்கமாகச் சொல்லும் கதை ஒரு கையோசை ஆகும்.

தம்பி, தங்கை, அம்மா என்போரின் பொறுப்பினை பதின்மவயதிலே தந்தையைப் பறிகொடுத்துச்சுமை தாங்கியாகும் அக்கா. அக்காவின் கஷ்டத்தினை உணராமல் மோட்டபைக் வேண்டுவ தற்கு பணம் கேட்டு நச்சரித்தல் தாங்காது படுகின்ற வேதனையைச் சொல்லும் கதை 'பகல் நிலவு'.

'இராப்பொழுதுகளில் ஒளி வீசும் மதியவள். பகற் பொழுதுகளில் பகலவனுக்குத் தன்னொளி ஈந்து தன்னை மறைக்கிறாள்.' என்று கதை நிறைவுறுவது மிகப்பொருத்தமானதே.

சாந்தமலர் என்னும் பெண், பாடசாலைக் காலமிருந்தே துடுக்கானவள். வாய்க்கு வாய், கைக்கு கை என எதற்கும் துணிச்சலானவள். தன்னை நேசிப்பவர் மீது அதீதமான அன்பும் உடையவர்.

கால ஓட்டத்தில் சாந்தமலரின் நண்பி ஆசிரியை ஆகின்றார். அந்தப் பாடசாலையில் ஒரு மாணவியைத் துடுக்குத் தனத்தோடு காண்கின்றார். எங்கோ பார்த்த நினைவலைகளில் மூழ்கி நிற்கிறார் ஆசிரியர்.

'நெடிதுயர்ந்த தோற்றம்...., வாய் நிறைந்த வெற்றிலை.. அள்ளி உச்சியில் போட்ட குடுமி... நீளமான சட்டை அடாவடியான தோற்றத்தோடு நின்றாள். என்ன ரீச்சர் என்னைத் தெரியுமோ? வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரிக்கிறாள் சாந்தமலர்.'

அப்போது அந்தத் துடுக்கான மாணவி சாந்தமலரின் மகள். நூலைப் போல சேலை, தாயைப் போல பிள்ளை என்பதை எடுத்துச் சொல்லும் கதை 'அவள் ஒரு தொடர்கதை '.

உழைக்காத சோம்பேறியான, குடிகாரக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண், தனது, வாழ்வை வாழ்ந்துதான் முடிப்பேனென்ற மனத்திண்மையுடன், கணவனின் அடி உதைகளைச் சகித்து வாழ்வதை எடுத்துக்காட்டும் கதை ஒரு பகல் ஒரு இரவு எனும் கதை.

'அது அப்பிடி இல்லையம்மா.. இது நான் தெரிஞ்செடுத்த வாழ்க்கை நித்தி. அதுக்காக நான் கஷ்டப்பட வேணுமெண்டில்லைத்தான். எப்பவோ நான் அவனைக் கலைச்சு விட்டிருப்பன். ஆனாலும் பிள்ளை குட்டியெண்டு ஏதும் எனக்கில்லை. எனக்கிருக்கிறது ஒரே உறவெண்டாலும் அது அவன்தான். நாளைக்கு அவன் செத்துப் போனாலும் எல்லாருக்கும் பாரமாத்தான் நான் இருக்க வேணும். என்னட்ட என்ன இருக்கெண்டுதான் சொந்தம் பந்தம் பாக்குமே தவிர. என்னை ஒரு மனிசியா ஆரும் நினைக்க மாட்டினம். இதுதான் உண்மை. ஒரு பகலும் ஒரு இரவும் போலதான் இந்த மனிசற்ற வாழ்க்கையும்.. இது என்னோடையே முடிஞ்சு போகட்டும்.'

என்ற விபரிப்பு, கதையின் சாரத்தை சொல்லி நிற்கின்றது. இக்கதை சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட சிதைவைச் சொல்கின்றது. குடும்பம், தனிச்சொத்து என்றே ஆகிப்போன சமுகத்தின் மனப்பாங்கு மாற்றத்தைச் சுட்டுகின்றது.

ஒரு பெண்ணின், ஆணின் விருப்பமின்றி வேறு காரணங்களுக்காக கட்டாயக் கல்யாணம் பண்ணிவைத்து, அதனால் இறுதியில் பெண்ணின் வாழ்வே சீரழிவதைச் சொல்லும் கதை, 'மரணத்தின் வாழ்வு'.

'பாவம் என்னப்பா வள்ளியக்கா... மாமியார் தான் சாகிறதுக்குக்குள்ள தன்ர ஒரே மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமயன்ர மகளுக்கு கட்டி வைக்க வேணு மெண்டு ஒற்றைக் கால்ல நிண்டெல்லோ கட்டி வைச்சவை. அப்படிக் கட்டிவைக்கேக்க தன்ர மோனுக்கு விருப்பமிருக்கோ இல்லை யோவெண்டு ஒரு வார்த்தை கேட்டிருந்தால் இண்டைக்கு இந்த மனிசியேன் இப்படிக் கிணத்துக்க குதிக்கப் போகுது?'

என்று சொல்வது பரிதாபத்தின் உச்சத்தை விபரிக்கின்றது.

ஒரு பெண்ணின் ஆளுமையை மறுதலிக்கும் ஆணைத் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கும் சூழ்நிலையை மீறமுடியாமல், ஆப்பிழுத்த குரங்காய்த் திணறும் வாழ்க்கைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் கதை பெண்ணியவாதி.

அந்த அபலைப் பெண்ணின் தாம் பத்திய அனுபவத்தினைப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

'மெல்லிய வலி அவள் உடலெங்கும் பரவி மனதை அழுத்தத் தொடங்க. விழி நீர் வழிந்து அவன் கொடுத்த முத்தத்தின் அனலை அணைத்துக் கொண்டிருக்கிறது அவள் கன்னத்தில்.'

முதற் சொன்ன ஆறு கதைகளிலும் பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் அவஸ்தைக்கு ஆளாக, இக்கதையில் ஆணாதிக்கச் சிந்தனையில் சிறைப்பட்டு, அடக்கி வாசித்தல் பண்பை, பெண்களின் ராஜதந்திரமாகக் காட்ட முற்படுவது, பெண்ணியம்பற்றி புரிதலில் சூழ்நிலை யின் கைதியாக கதை ஆசிரியர் இடர்ப் படுவது தெரிகின்றது.

இந்த ஏழு கதைகளிலும் பெண்களின் நுண்ணிய உணர்வு சார்ந்த பிரச்சினை களை அவசியமாக உணர்ந்து சொல்லும் திறன் நளாயினிடம் அபாரமாக வெளிப் படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஏழை - பணக்காரன், பண்பானவர் - திமிர்பிடித்தவர், வசதியாக வாழ்பவர் - சந்து முடுக்குகளில் வாழ்பவர், பிறருக்கு உதவுபவர் - பிறரிடம் தட்டிப்பறிப்பவர், என்றும் புறணி பேசுபவர்.... எனச் சமூகத்தின் பல்பரிமாணத்தினையும் கதை விபரிப்புக்களில் வெளிப்படை யாகவும் கதை ஓட்டத்திலும் குறிப்பிடு வதோடு, தனது நிலைப்பாட்டையும் நாசூக்காக வெளிப்படுத்துபவர் நளா யினி.

இவர் ஈழத்து பெண் எழுத்தாளர் வரிசையில் தனக்கான இடத்தைத் தக்கவைப்பார் என்ற நம்பிக்கையுடன் இன்னமும் எழுதவேண்டும் என்ற ஆவ லுடன், நிறைவுசெய்கின்றேன்.

**40 ஆவது மஞ்சரி**

**இம் மஞ்சரி நாம் ஏற்கனவே அறிவித்தபடி தனி ஒருவரின் சிறுகதைகளை உள்ளடக்கியதாய் வரவுள்ளது. இக் கதைகள் ஏற்கனவே மஞ்சரியில் பிரசுரிக்காதவைகளாகவும் மஞ்சரியில் ஒரு சிறுகதையாவது எழுதியவராகவும் இருத்தல் வேண்டும்.**

**15-08-2023 இற்கு முன் அனுப்பி வைக்கவும்**

luxmi2128@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படியளந்த இயற்கை

தோப்பூர்ச் சந்திக்கும் மூதூருக்கும் இடைப்பட்ட பிரதான வீதி அது. அனைத்துரக வாகனங்களும் சென்று வருவதனால், அந்தப் பாதை தேய்ந்து கற்களால் நிரம்பிக் காணப்பட்டது.

எந்த வாகனம் போனாலும் மாட்டுவண்டி போவது போன்று ஒரே கடமுடா சத்தமாகவும் புழுதியாகவும் இருந்தது. வீதிக்குச்சமாந்தரமாக வயல்களுக்கு நீர் பாயும் பிரதான வாய்க்காலானது ஊருக்கே குளிரூட்டியபடி... ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பலர் குளிப்பதற்கும் சிலர் தூண்டிலில் மீன்பிடிப்பதற்குமாகப் பலவாறு உபயோகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் பிரதானவீதியில் இருந்து இருமருங்கிலும் அயல்க் கிராமங்களுக்குச் செல்வ தற்கான சிறிய சிறிய ஒழுங்கைகளும் காணப்பட்டன. வேகமாகவும் இலகுவாகவும் செல்வதற்காக வயல் வரப்புகளின்மேல் சில ஒற்றையடிப் பாதைகளை, நடந்து நடந்தே உருவாக்கி இருந்தனர் கிராமத்தவர்கள்.

கிராமத்தைச் சுற்றி வயல்களும், வயல்களுக்கு நீர்பாயும் கிளை வாய்க்கால்களும்,

**பிரமி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் தோறும் தென்னை மற்றும் மா மரங்களால்ஆன சோலைகளுடன், குளிரான இயற்கைக் காற்றுக்குச் சொந்தமான ஊராகப் பலத்தடிச்சேனை காணப்பட்டது. அங்குதான் தன் ஐந்து பிள்ளைகளுடன் மதிவதனா சீவியம் செய்து கொண்டிருந்தாள்.

கிராமத்தில் எருமைப்பால், பசுப்பால் இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும். தென்னை மரங்கள் அதிகம் காணப்படுவதனால், அதிலிருந்து விழும் காய்ந்த ஓலை ஒன்றுக்கு மூன்று ரூபாய் கொடுத்து வாங்கி, அவளது வீட்டின் முன் பாதையோடு ஓடிக் கொண்டிருக்கும் வயலுக்கு, நீர்பாய்ச்சப்படும் கிளை வாய்க்காலில் ஊற வைத்து, பின்பு அதைப் பிளந்து பின்னிக் குடிசை வீடு அமைப்பவர்களுக்கும், காணிக்கு வேலி அடைப்பவர்களுக்கும் விற்று வந்தாள். அத்துடன் ஊரில் கிடைக்கும் பாலை வாங்கிச் சிறிய சிறிய கண்ணாடிப் போத்தல்களில் தயிர் உறைத்து, கிராமங்களில் உள்ள கடைகளில் கொடுத்து விற்றும் வந்தாள். இந்த இரண்டும் இவளது பிரதான வருமானத் தொழிலாகக் காணப்பட்டது.

இவள் ஊறப் போடும் ஓலைகளை எல்லாம் அதிகாலமே எழுந்து, வாய்க்காலில் இருந்து முற்றத்திற்குக் கொண்டு வந்து, அதை இரண்டாகப் பிளந்து மதிவதனா பின்னுவதற்கு வசதியாக அடுக்கி வைத்துவிடுவான் ஜலன். முதல் நாள் மாலை மதிவதனா காய்ச்சி, உறை மோர் போட்டு வைத்த பால்போத்தலின் மேல், ஆடை படிந்துறைந்து வாசனை வீசிக்கொண்டு இருக்கும். வழக்கமான வாடிக்கைக் கடைகளுக்கு அந்தத் தயிர்ப் போத்தல்களைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுப் பாடசாலைக்குச் செல்வான் ஜலன்.

அவன் மதிவதனாவின் இரண்டாவது மகன். பதின்மூன்று வயதுடைய அவன், தரம் ஏழில் பட்டித்திடல் அ.த.க. பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தான். ஜலன் ஓரளவு உயரமானவன். முத்துப் பற்கள் தெரிய எப்பவும் சிரித்தபடி இருப்பான். அவனுக்குத் தாமரைப் பூப்போன்ற அகன்ற முகம். வழக்கமாகப் பாடசாலைக்கு அணிந்து செல்லும் பழையகாற்சட்டை ஒன்றையே அணிந்திருப்பான். அவன்தான் மதிவதனாவின் வலதுகை. அன்று ஆறு மாதங்களின் பின் பட்டணத்திற்குப் படிப்பதற்காகச் சென்ற மதிவதனாவின் மூத்த மகள் அதிஷ்டரூபி வருகின்றாள். விடுமுறை நாள் என்பதனால், சற்று தாமதமாகவே தயிர் விற்பதற்காக ஆயத்தமாகின்றான் ஜலன்.

ஒற்றையடி வரப்போரப் பாதையில் குதியுயர்ந்த புதிய செருப்புடன், பட்டணத்திற்குப் படிக்கப் போன அதிஷ்டரூபி வந்து கொண்டிருக்கின்றாள். அவளது புதிய ஆடையும் விரித்து விடப்பட்ட தலைஅலங்காரமும், வீட்டுக்கு வந்து உறவுகளைப் பார்க்க போகும் சந்தோஷமான சிரித்த முகமும்... அனைத்தையும் பார்க்கும் பொழுது, அவளின் முந்தின கிராமத்துச் சாயலில் நகரத்து வாசனையும் கலந்திருப்பது தெரிந்தது.

தூரத்தில் தம்பி ஜலன் வருவது போலத் தெரிகின்றது அதிஷ்ட ரூபிக்கு. வளர்ந்த ஆண்கள் பயன்படுத்தும், பெரிய சைக்கிளின் வார்க் கம்பியில் இருப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் எழும்பி நிற்பதுமாய், அவன் சின்னக் கால்களுக்கு எட்டாத பெடலை உதைத்து விடுவதும், பின் அது சுற்றி மேலே வரும் போது, மீண்டும் உதைத்து விடுவதுமாய் தெத்தித் தெத்தி மிதித்து... வந்து கொண்டிருந்தான்.

"என்ன இது? குஞ்சிக் குஞ்சி மீனாக் கிடக்கு. ஆறு மாதத்திற்குப் பிறகு வீட்டுக்கு வந்திருக்கிறேன். இறால், நண்டு, இறைச்சி என்று ஏதும் வாங்கி தர மாட்டியளே. சரி அது இல்லாட் டியும் கொஞ்சம் பெரிய மீனாவது வாங்கி இருக்கக் கூடாதா? என்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

சைக்கிளின் கரியரில் காட்போட் பெட்டியொன்று, நார் கிளம்பிய நைலோன் கையிற்றினால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அதிஷ்டரூபியைக் கண்டதும், அவளது அழகிய தோற்றமும் மகிழ்ச்சியான முகமும் அவனுக்கு ஒருவித பூரிப்புடன் உற்சாகத்தையும் ஆனந்தத் தையும் கொடுத்தது. அவன் தூரத்தில் வரும்போதே கால்களால் பிரேக் போட்டுக் குத்திக் குத்தி சைக்கிளை நிறுத்தி, ஒருவாறு சிரமப்பட்டு வரப்பில் சைக்கிளை நிறுத்திக் கொண்டான்.

அவளிடம் "வந்துட்டியா அக்கா?" என்று தாமரை முகம் முழுவதும் சிரிக்கக் கேட்டான். "வரப்பில பார்த்துக் கவன மாக நடந்து வீட்ட போ அக்கா. நான் தயிரை விற்றுப் போட்டுக் காசும் கறியும் வாங்கிக் கொண்டு வருகிறேன்..." என்று அக்கறையாகச் சொல்லிவிட்டு, மீண்டும் அந்தச் சைக்கிளின் பாரின் மேல் பாய்ந்து ஏறி இருந்து, எத்தி உதைத்து ஓட்டிக் கொண்டு சென்றான். அவனது காற் சட்டையின் பின்பக்கத்தில் இருந்த கிழிஞ் சலை மறைக்க, அதன்மேல் இன்னும் ஒரு துணி வைத்துத் தைத்து அண்டை போடப்பட்டிருந்தது. நீலக்காற் சட் டையில் கறுப்புத் துணி வைத்து அண்டை போடப்பட்டு நவீனரக ஆடை போன்று அது ஒப்பனை காட்டியது.

அதிஷ்டரூபி வீட்டிற்கு வந்து குளித் துவிட்டு ஓர் அழகான ஆடை ஒன்றை உடுத்திக்கொண்டாள். மற்றைய தம்பி தங்கைகளுடன் தனது பட்டணத்துப் படிப்பைப்பற்றியும், பட்டணத்துப் புதிய நண்பர்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தாள். அவள் பேசும்போது அடுத்தடுத்து ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட அம்மாவுக்கு, தன்மகள் பட்ட ணத்தில் படிக்கிறாள்... என்ற மகிழ்ச்சியில் கிராமத்தில் பட்டபாடுகள் அவளுள் மறைந்து போய்க் கொண்டிருந்தன. தம்பி வந்து கொண்டிருந்தான். வயல் வரப்பில்அவனைக் காணும்போது, அவனுடைய முகத்தில் இருந்த மகிழ்ச்சி இப்போது இல்லை. வாடிய முகத்துடன், வாங்கி வந்த சிறிய சூடை மீன்களை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, அதிஷ் டரூபி பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டு இருந்தான்.

அவள் பேசும் ஆங்கிலம் கலந்த தமிழ் அவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் அக்கா ஏதோ பெரிய படிப்புப் படிக் கிறாள்... என்ற மகிழ்ச்சியில் அவள் பேசுவதை எல்லாம் கேட்டு வியந்து கொண்டு இருந்தான். அவனது முகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாட்டம் இன்னும் மாறவில்லை. மதிவதனா அவனை நன்கு புரிந்து கொண்டவள். 'ஏதோ நடந்திருக்கின்றது! என்னவாக இருக்கும்? சரி சற்று நேரத்தில் கேட்கலாம்' என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டே மதியவேளைக்கான சமையலை ஆரம்பிக்கின்றாள்.

ஆறு மாதங்களின்பின் அன்றுதான் மதிவதனாவின் வீட்டில் மீன்வாசனை எழுகின்றது. பக்கத்து வீட்டு மேகலா அக்காவின் பூனை அந்தச் சிறிய சூடை மீன்களைச் சூறையாடி விடலாம்... என்ற நோக்கத்தோடு வீட்டை சுற்றிச் சுற்றிக் கத்திக் கொண்டிருந்தது.

"என்ன வதனா பட்டணத்தில இருந்து மகள் வந்திருக்கிறாள் போல, உன்ர சமையல் வாசனை எங்கட வீட்டுக்க வந்து கூப்பிட்டுச் சொல்லுது..." என்று அயல்வீட்டு வக்சலா பகிடியாகச் சொல்லிக் கொண்டு, கடந்து போய்க் கொண்டிருந்தாள். இந்தக் கிராமத்தின் வீடுகளில் வேலிகள் எல்லாம் ஓலைகளால் அடைக்கப்பட்டு இருக்கும். தச்சன் வீட்டில் கூரை ஒழுக்காம்... என்பது போல ஓலை பின்னி விற்கும் மதிவதனாவின் வீட்டு வேலிகள் வெறுமையாகவே இருந்தன.

வீதி ஓரம் போவோர்களுக்கு எல்லாம், மதிவதனாவின் வீட்டு முற்றம் மட்டுமல்ல, வீட்டின் உட்புறமும் அப்பட்டமாய் தெரியும். பூட்டி வைப்பதற்கு ஜன்னல் கதவுகளும் இருக்கவில்லை. இரவு நேரங்களில் திரைச்சீலையால் மூடிக்கொள்வாள் மதிவதனா. சூடை மீன் சொதியும் வைத்து, சில மீன்களைப் பொரித்தும், வழக்கம் போல் செய்யும் செத்தல் மிளகாய்ச் சம்பலையும் இடித்துப் பச்சை அரிசிச் சோறும் சமைத்து, மதிய உணவைப் பரிமாறுகின்றாள் தாய்.

சாப்பிடும்பொழுது அதிஷ்டரூபி கேட்கின்றாள் "என்ன இது? குஞ்சிக் குஞ்சி மீனாக் கிடக்கு, ஆறு மாதத்திற்குப் பிறகு வீட்டுக்கு வந்திருக்கிறேன். இறால், நண்டு, இறைச்சி என்று ஏதும் வாங்கி தர மாட்டியளே. சரி அது இல்லாட்டியும் கொஞ்சம் பெரிய மீனாவது வாங்கி இருக்கக் கூடாதா? என்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

ஜலனுக்கு முகம் இன்னும் ஒடிக் கறுத்தது. மாலை ஆனதும் அதே மதியச் சமையல் இரவு உணவுக்காகக் காத்திருந்தது. மதிவதனாவின் வெறும் சொதியைக்கூட மாதம் முழுவதும் சலிக்காமல் சாப்பிடலாம் அத்தனை சுவை இருக்கும். அதில் அவிந்து கரைந்த மாங்காய்த் துண்டுகள்தான் அதற்குச் சுவையூட்டி. அவள் கைப்பக்குவத்தை விட சமையலின் அற்புத சுவைக்கு மதிவதனா வேறு இரசாயன இரகசியம் ஒன்றும் ஒருபோதும் சேர்த்ததே இல்லை. அனைவரும் கூடி உட்கார்ந்து இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டுத் தூக்கத்திற்கு செல்கிறார்கள்.

கதவுக்கும், ஜன்னல் வெளிக்கும் திரைச்சீலைகளைப் போட்டுவிடுகின்றாள் தாய். எல்லோரும் படுத்துக் கொள்கின்றனர். மதிவதனாவின் நான்கு பிள்ளைகளும் இரண்டு வயதுகள் வித்தியாசத்தில் பிறந்தவர்கள். இளையவள் மூத்தவளுக்கு 12 வயது வித்தியாசத்தில் பிறந்தவள். சற்று நேரத்தில் பிள்ளைகள் தூங்கிவிடுகின்றனர். ஜலன் தூங்கியிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டான் என்பது மதிவதனாவுக்குத் தெரியும். அவனது முகவாடல் அவளுக்குப் பெருத்த வேதனையாய் இருந்தது. அதிஷ்டரூபியின் அருகில் படுத்திருந்த ஜலனின் பக்கமாய்ச் சென்று, மகளுக்குக் கேட்கக்கூடா வகையில், அவனிடம் மெதுவாக வினாவுகின்றாள். "மகன் என்ன நடந்தது? பிள்ளைக்கு பகல் எல்லாம் முகம் சரியில்லையே. என்ன நடந்தது?" கவலை தோய்ந்த குரலில் அமைதியாய்க் கேட்கிறாள் அம்மா.

"அதுவா அம்மா? அக்கா வருகிறாள். அவள் பட்டணத்தில் படிக்கிறவள். அவளுக்கு வீட்டுக் கஷ்டம் தெரியக் கூடாது. அவள் கவலைப்பட்டு வீட்டு நினைவாக இருந்துவிடுவாள். அது அவளுடைய படிப்பைக் கெடுத்துவிடும். இரண்டு நாள்தானே வீட்டில் இருக்கப் போகின்றாள். அவளுக்குச் சமைத்துக் கொடுக்க இறால், நண்டு அல்லது இறைச்சி வாங்கி வா... என்று சொல்லி என்னை அனுப்பினீர்கள்.

நான் தயிரைக் கொண்டு போய்க் கடையில் கொடுக்க முதல், பழைய தயிர்க் காசைத் தருமாறு கேட்டேன். வெள்ளையன் ஐயா அடுத்த வாரம் தருவதாகச் சொல்லி அனுப்பிவிட்டார். சரி இந்தத் தயிரைப் பள்ளிக்கூடப் பக்கம் கொண்டு போய் விற்றுப்போட்டால், உடன காசு கிடைக்கும். அதை வைத்து ஏதாவது கறி வாங்கிக் கொண்டு வரலாம் என்று அந்தப் பக்கம் போனேன். என்னுடைய வகுப்பு பொடியன்கள் என்னைப் பார்த்துத் தயிர்க்காரன் வாரான்... என்று நக்கல் அடிச்சான்கள் அம்மா. சரி பரவாயில்லை என்று இரண்டு பேருக்கு தயிரை விற்றுப்போட்டு, அதில கிடைத்த முப்பது ரூபாவை வாங்கிக் கொண்டு, அடுத்த ஒழுங்கைக்கு போனேன். அங்கு எனது வகுப்பில் படிக்கும் ஒரு பெட்டை என்னைப் பார்த்து, ''பீத்தல் காய்ச் சட்டை... இஞ்ச தயிரைக் கொண்டு வா..." என்று கூப்பிட்டாள். நான் என்ன செய்வது? அக்காவுக்கு கறி வாங்க தயிரை வித்தாக வேண்டும் அல்லவா! அவள் அப்படிக் கூப்பிடும் போது, அவளது வாசலுக்குப் போய் தயிரைக் குடுத்துட்டு, அவள் கொடுத்த பதினைந்து ரூபாய்க் காசயும் வாங்கிக் கொண்டு வந்தேன். அடுத்த ஒழுங்கைக்கும் போனேன். அங்கு யாரும் தயிர் வாங்கயில்ல. வரும் வழியில் மிகுதித் தயிர்ப் போத்தல்கள் எல்லாவற்றையும் வெள்ளையன் ஐயா கடையில கொடுத்துட்டு அவர்கிட்ட இருந்து, அக்கா வந்திருக்காள் கறிக்கு காசு வேணும். ஐம்பது ரூபாயாவது தாங்க... என்று கேட்க அவர், 15 ரூபாயத்தூக்கி வேண்டா வெறுப்பா தந்தார் அம்மா. எல்லாம் சேர்த்தால் அறுபது ரூபாய்தான் வந்தது அதுக்கு இந்தச் சூடை மீன் குஞ்சுகளை வாங்கத்தான் முடிந்தது. மீன்காரனிடம் கூட ஒரு பெரிய மீன் தருமாறு கெஞ்சிப் பார்த்தேன் அவனும் மாட்டேன் என்றுபோட்டான். அக்கா வந்த கதையையும் சொல்லிப் பார்த்தேன். அவன் என்ர கதையைக் கணக்கிலே எடுக்கேல்லை. எனக்கு அவனது மீன் பெட்டியில் என்ன இருக்கிறது? என்று எட்டிப் பார்க்கவும் முடியவில்லை.

வகுப்புப் பிள்ளைகள் என்னை அப்படிப் பேசியது கூட எனக்குக் கவலையாக இருக்கவில்லை அம்மா. ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவுக்கு நல்ல கறி சமைத்துக் கொடுக்க முடியவில்லையே... எண்டதுதான் கவலையாக இருக்கிறது அம்மா. இது அவளுக்கு தெரிந்தால் கவலைப்படுவாள். மதியம் சாப்பிடாமல் இருந்து விடுவாள் என்றுதான் நான் உங்களிடம் ஒன்றும் சொல்லவில்லை." என்று கண்களை துடைத்துத் துடைத்து மெண்டு விழுங்கிப் பக்கத்தில் படுத்திருக்கும் அக்காவிற்குக் கேட்கக் கூடாது என்று இரகசியமாய் தன் வேதனைகளைத் தாயிடம் கொட்டிக் கொண்டிருந்தான். புதிய இடம் என்பதனால், தூக்கம் வரவில்லை அதிஷ்டரூபிக்கு. அவள் விழித்திருந்த நிலையில், யாருக்கும் தெரியாமல் வாயைப் பொத்தி விக்கி விக்கி அழுதுகொண்டு இருந்தாள். தன் முட்டாள்தனத்தை நினைத்துத் தனக் குள்ளேயே புழுங்கிக்கொண்டு விடியும் வரை தூக்கமின்றி அவதிப் பட்டாள். விடிந்ததும், தன் மனப்பாரத்தை எல்லாம் தாயிடம் கொட்டி விட்டு, நிம்மதியாய் அசந்து தூங்கிக் கொண்டிருந்த தம்பியின் முகத்தைத் தடவியபடி... நன்றியோடு முத்தமிட்டாள் அதிஷ்டரூபி.

இந்தப் பிஞ்சு மனதில் எத்தனை புத்திசாலித்தனம். என்மீது எவ்வளவு பாசம் அவனுக்கு. என் பட்டணத்துப் படிப்பிற்காக, பட்டணத்து வாழ்விற்காக தம்பி இத்தனை துன்பப்படுகிறானே... என்று கவலைப்பட்டாள். அவன் தனக்குத் தம்பியாகக் கிடைத்ததை நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டாள். காலையில் என்ன உணவு கொடுக்கலாம்? என்று சிந்தித்துக் கொண்டிருந்த அம்மாவிடம் சென்று, "அம்மா எனக்குப் பழம் கஞ்சி குடிக்க ஆசையாய் இருக்கிறது" என்றாள். "மதியம் செத்தல் மிளகாய்ச் சம்பல் செய்து தாங்கோ. நேற்று நீங்கள் செய்து தந்தது மிகவும் ருசியாக இருந்தது. இன்றைக்கும் அதைச் சாப்பிட வேண்டும் போல் இருக்கின்றது."

'இவளும் தன் வயிற்றில் பிறந்தவள்தான்' என்று தன்னைத்தானே ஆறுதல்படுத்திக் கொண்டு, பழம் கஞ்சியைக் கரைத்து, வாய்க்காலில் ஓலை மட்டைகளை இழுத்துக் கொண்டிருந்த ஜலனையும் கஞ்சி குடிக்க வா என்று கூப்பிடுகின்றாள். "தம்பி மீன், இறைச்சி என்ன, நம்மட அம்மாட கைப் பக்குவத்தில தயிர்க் கஞ்சி கூட அமிர்தம் போல இருக்கு என்ன!" என்று அவன் மனதைக் குளிரப் பண்ணினாள்.

எல்லோரும் கஞ்சி குடித்து முடித்ததும், "அக்கா வாய்க்கால் பக்கம் போகலாமா...?" என்றான் ஜலன். வாய்க்காலில் மீன் பிடிக்கும் தூண்டில்களையும் எடுத்துக்கொண்டான். வயல் வரப்புகளிலும், வாய்க்கால் தண்ணீரிலும் சேறு பூசி விளையாடி இயற்கையோடு தன் குடும்ப வறுமையைத் தொலைத்துக் காற்றிலே பறந்து கொண்டிருந்தாள் அதிஷ்டரூபி. தம்பி திடீரெனச் சத்தம் போடுகின்றான். "ஓடிவாடி அக்கா... இங்க ஓடிவா..." அவள் பதறியடித்து, வரப்புகளில் விழுந்தெழுந்தோடி வாய்க்காலோரம் தம்பி நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தாள். அங்கே... அவன் தூண்டிலில் மாட்டிய நிலையில் குற்றுயிராய் மண்ணில்கிடந்து துடித்துக் கொண்டிருந்தது, பெண்ணாம் பெரிய விரால் மீன் ஒன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் முடிவதில்லை..

டிலுக்ஷி சந்திரகுமார்

இன்று ஞாயிற்றுக்கிழமை.. ஓய்வு நாள். ஆறு நாட்கள் ஓடிக் களைத்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் நாள். பெரும்பாலானோருக்கு அந்த நாள் சொர்க்கம். ஆனால் இன்னும் சிலருக்கு அது அவஸ்தையே. சொந்த ஊரிலிருந்து வெளியூர்களுக்குச் சென்று வேலை பார்ப்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் தம் விடுமுறையைக் கழித்து மீண்டும் வெளியூர்களுக்குச் செல்லும் நாளது.. அப்படி ஒரு நாள்தான் எனக்கும் இன்று. விடுமுறைக்காக யாழ்ப்பாணத்திலுள்ள எனது வீட்டுக்கு வந்த நான் எனது வீட்டைப் பிரிந்து மீண்டும் எனது பணியிடத்திற்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். ஊரை விட்டு போகும் போதெல்லாம் "சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா.." இந்த பாடல் வரிகள் எப்போதுமே என்னைத் தழுவிக் கொள்ளும். அது எனக்கு மட்டுமல்ல ஊரைப் பிரிந்து செல்லும் ஒவ்வொருவருக்கும் அந்த பாடல் வரிகள் எப்போதுமே நினைவில் வரும்.

நான் எனது பயணப் பைகளைத் தயார் செய்து கொண்டிருந்தேன். என்னவளோ "எதுக்காக இரவு நேரத்துல பயணம் வெளிக்கிடுறீங்கள்.. நேரத்துக்கே கிளம்பியிருந்தா நாளைக்கு வேலைக்குப் போறது சுகமாயிருந்திருக்குமே.." என்றவாறே எனது பைகளில் நொருக்கு தீனிகளை அடைந்து கொண்டிருந்தாள். "வேளைக்கு போய் நான் என்ன செய்யுறது.. உங்களோட நேரம் செலவிடலாமென்று இருந்தன்.." என்று கூறியபடியே வாசலை நோக்கிச் சென்றேன். அப்போது எனது மகள் டியூசன் முடிந்து வீடு வந்தவளோ என் கால்களை இறுக அணைத்துக் கொண்டு "அப்பா.. போகாதீங்க.. போகாதீங்க.." என்று கதறி அழுது எனது உள்ளத்தையும் சேர்த்து கலங்கச் செய்தாள்.

அவள் வருவதற்கு முன்னே சென்றுவிட எண்ணியே நான் வேகமாகப் புறப்பட்டேன். ஆனாலும் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தின் வதனத்தில் கண்ணீர் துளிகளை கண்ட பின்னே என்னுடைய பயணம் தொடங்க வேண்டும் போலும்.. “யாழினி.. அப்பா போய் வரும்போது நீ கேட்ட மணிக்கூடு வாங்கிட்டு வாறன். இப்ப அப்பாவ போக விடும்மா.” என்று அவளிடம் கெஞ்சியும் எந்த பயனும் இல்லை.. இறுதியில் அவளது அம்மாவின் அதட்ட லினால் என்னை கட்டித் தழுவி முத்தமிட்ட பின்னே விடுவித்துக் கொண்டாள்.

ஒரு வழியாக நான் பேருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். ஒன்லைனில் இருக்கையை முன்பதிவு செய்ததால் கடினமில்லை. இல்லையேல் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு ஆறு மணிநேர பயணம் பெரும்பாடாயிருக்கும். அந்தக் கவலை இப்போதில்லை. இப்போது சரியாக ஆறு மணி, பேருந்து பஸ் நிலையத்திற்கு வருவதற்கு இன்னும் நேரமாகக்கூடும். ஆகவே நான் அங்கே நிலையத்திலுள்ள இருக்கையொன்றில் அமர்ந்திருந்து அங்கு வருவோரையும் போவோரையும் பார்த்துக்கொண்டே நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தேன்.

அது இருள் சூழும் வேளையாகிலும் அங்கு சனநடமாட்டமோ ஓய்ந்தபாடில்லை. அங்கு பலர்தமது பணியிடங்களிலிருந்தும் மாணவர்கள் சிலர் தமது பிரத்தியேக வகுப்புக்களை முடித்துவிட்டு வீடுகளுக்கும் இன்னும் சிலர் என்னைப் போன்றவர்கள் தமது சொந்த ஊரிலிருந்து வெளியூருக்கு செல்வதற்காகவேண்டியும் பரபரப்புடன் இருந்தனர். அந்த பரபரப்பு ஒவ்வொருவருடைய பயணத்தினுடைய முக்கியத்துவத்தையும் புளங்காங்கித்தது. ஒரு பேருந்தை அடையமுடியாவிடில் அடுத்த பேருந்துக்காகக் காத்திருப்பவர்களின் சலிப்பு நேரத்துக்கான முக்கியத்துவத்தை எடுத்தியம்பியது.

இப்படியாகவே எனது பேருந்தும் நிலையத்திற்கு வந்தது. நான் எனது முன்பதிவு இலக்கத்தை அடையாளம் கண்டு எனது இருக்கையை அடைந்து கொண்டேன். அது ஜன்னல் சீட், இருந்தும் பயனில்லை.. அதுதான் இரவு நேரம் ஆயிற்றே.. நான் அமர்ந்திருந்தவாறே பேருந்தினுள் நடப்பனவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தேன். அதுவும் சுவாரசியமாகத்தான் இருந்தது. பேருந்து வந்து நின்றதுதான் தாமதம் அதற்குள் அத்தனை இருக்கைகளும் நிரம்பி விட்டன.

அப்போது எனது சிறு பிராயம் தான் நினைவுக்கு வந்தது. அம்மாவுடன் சந்தைக்கு சென்று மீண்டும் வீடு திரும்பும் போது பஸ்ஸில் ஏறி அமர்ந்திருந்தபடி ஆசனங்கள் எப்போது நிறைவடையுமென பார்த்துக் கொண்டிருப்போம். ஏனெனில் இருக்கைகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே பஸ் புறப்படும். கன்டெக்டர் கூவி கூவி மக்களை தன் பக்கம் அழைக்கும் விதம் கானமாகவே ஒலிக்கும். இப்போதெல்லாம் அப்படி காண்பதே அரிது. கன்டெக்டர்கள் பயணம் தொடங்கும் போதுதான் பஸ்ஸிலேயே ஏறுவார்கள்.

தூரப் பயணம் என்பதால் அனைவருமே ஆசன முன்பதிவுகளை செய்து கொண்டனர். ஆயினும்கூட சிலர் முன்பதிவுகளை மேற்கொள்ளாது ஆசனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில்ஏறி அமர்ந்தவாறு கன்டெக்டரிடம் வாதாடிக் கொண்டிருந்தனர். வாதத்தின் இறுதியில் வெற்றி கண்டது என்னவோ கன்டெக்கடர்தான். ஆயினும் அவரது முகத்தில் வாட்டமே காணப்பட்டது. ஏனெனில் வாதத்தின் எதிராளியோ வயது முதிர்ந்தவர் அல்லவா.

வயதான பாமரரோ நடைமுறையை அறியாதவராக தனது சலிப்பை வெளிப் படுத்தியவாறு பேருந்திலிருந்து வெளியே றினார். கன்டெக்டர் அனைவரது ஆசன முன்பதிவுகளையும் சரிபார்த்து டிக்கட்டினை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சாரதி உள் நுழைந்து பேருந்தை செலுத்தினார். பயணம் ஆரம்பித்தவுடன் ஒரு புத்துணர்வு எங்கிருந்தோ தொற்றிக் கொண்டது. ஜன்னல் ஓரம் எதிர்காற்று வீச வீதியையே பார்த்துக் கொண்டிருந்தவாறு எனது பயணமும் தொடங்கியது.

பயணம் தொடங்கிய சிறிது நேரத் துக்கெல்லாம் என்னை நித்திராதேவி ஆட்கொண்டாள் போலும். என் கண்களை சொக்கிய உறக்கத்தை என் னால் உதறித்தள்ள முடியாமல் நானும் அணைத்துக் கொண்டேன். கண் அயர்ந் ததும் தூக்கம் தூரமாகிப் போனது.

ஜன்னலிலிருந்து வந்த தென்றல் சூறா வளியாகி என் மூச்சை பிடிக்கத் தொடங் கிவிட்டது. சில்லென்ற காற்றும் என் உடலை நடுங்க வைத்து மயிர் கால்களை குத்திட்டு நிற்கச் செய்தது. இந்த தரு ணத்தில் எனது தூக்கமோ தூரமாகிப் போனது. எனது தோற்பையை இறுக்கி அணைத்தவாறு சாளரத்தை சாத்திய வனாய் அமர்ந்திருந்தேன். எனக்கருகில் இருந்தவரோ எனது தோளில் தூங்கி வழிந்தவராய் இருக்க பேச்சுத் துணைக் கும் ஆளற்றுப் போயிருந்தேன்.

ஆனாலும்கூட அந்தத் தருணமும் எனக்கு அழகாகத்தானிருந்தது. முன்னிருக்கையின் சாளர தென்றலின் தீண்டலுடன் எஸ்.பி.பின் கானமழை என்னை காளைப் பருவத்திலிருந்து விடலைப் பருவத்திற்கு அழைத்துச் சென்றது. அந்த நினைவுகள் என்னை அறியாமலே என் உதட்டில் புன்னகையை அள்ளித்தெளித்தது. தனது விடலைப் பருவத்தினை விரும்பாதவர் எவரும் உண்டா என்ன?

எனது பன்னிரண்டாவது வயதில் நான் மேற்கொண்ட முதலாவது சுற்றுலா என் நினைவுக்கு வந்தது. சுற்றுலா செல்வதற்காக பேருந்தில் ஏறியவர்களோ பின் இருக்கையை தேடிப் பிடித்து அமர்ந்து கொண்டவர்களானோம். தற்போது பின் ஆசனத்தை விரும்பாத வர்களோ ஒரு காலத்தில் நண்பர்களுடன் சேர்ந்து அமர்வதற்காக சண்டையிட்ட நாட்களும் உண்டல்லவா. பேருந்து புறப்படுவதற்கு முன்னமே பாடல்களைப் பாடத் தொடங்கியவர்கள் நடனங்க ளிலும் எங்கள் கைவரிசைகளை காட்டியிருந்தோம். விசில்களை அடித்தவாறு வீதிகளில் செல்பவர் களுக்கு கூச்சலிட்டுக் காட்டி அன்றைய நாளில் நாங்கள்தான் மகிழ்ச்சியாகவுள் ளோம் என்பதை அனைவருக்கும் பறைசாற்றியபடி எங்களது பயணத்தைத் தொடர்ந்ததும் நினைவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பன் என்னுடன் அமராமல் வேறொருவருடன் அமர்ந்தது எனக்கு சினமூட்ட நான் அவனுடன் என் எதிர்ப்பை தெரிவித்தது எல்லாம் என் நினைவுகளில் வர அவ்வயதில் இருந்த குழந்தைத்தனம் என்னை மேலும் நெகிழச்செய்தது. அவ்வாறு பேருந்து கிளிநொச்சியை அடைந்தது. அங்கு சிலர் தமது பயணத்தை முடித்துக் கொண்டு கீழிறங்க சிலர் பயணத்தைத் தொடங்குவதற்காக பேருந்தில் ஏறிக் கொண்டனர்.

பயணம் தொடங்கி ஒரு மணிநேரம் கழிந்திருக்கும் மீண்டும் என்கண்களை வருடியது தூக்கம். நான் அசந்து தூங்கிப்போனேன். பேருந்து நகர்ந்து திடீரென சாரதியின் அதிரடி பிரேக் பிடிப்பால் அனைவரும் முன்னோக்கி தள்ளப்பட்டோம். ஆழ்ந்த தூக்கத்தி லிருந்த பலர் முன்னாசனத்துடன் மோதியும் கொண்டனர். அந்த வேளை அனைவரது இருதயமும் சில நொடிகள் நின்றுதான் துடித்திருக்கும்.

சாரதியின் சடுதி நிறுத்தலில் சினம் கொண்ட சிலர் "ரைவர் பாத்து ஓட்டுங்க." என்று உரத்த குரலிலும், சிலர் "நித்திரை யில ஓட்டுறான் போல.." என முணு முணுத்தபடியும், சில வாலிபர்களோ "கோவிந்தா.. கோவிந்தா.." எனக் கோஷ மிட்டு சாரதியை கேலிசெய்தபடியே பேருந்தில் ஒரு பத்து நிமிடம் சலசலப்பு உண்டாயிற்று.

பேருந்து நடத்துனர் குறுக்காக வந்த மாட்டுடன் மோதாமலிருப்பதற்கே சடுதியாக நிறுத்தமிடப்பட்டது என தெரிவித்ததும் சலசலப்பு கொஞ்சம் நிதானப்படுத்தப்பட்டது. சிறிது நேரத் தின் பின் மீண்டும் பயணம் தொடங் கியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் எனது தூக்கம் எங்கு தொலைந்ததோ தெரிய வில்லை. அதேசமயம் பேருந்தில் "அலையே சிற்றலையே.. கரை வந்து வந்து போகும் அலையே.. என்னை தொடுவாய் மெதுவாய்ப் படர்வாய் என்றால் நுரையாய் கரையும் அலையே.." என்ற பாடல் என் மனதின் முதல் காதலை என் கண்முன் கொணர்ந்தது.

எனது பதினேழாவது வயதில் உயர்தரத்தில் கற்றுக்கொண்டிருந்த போது எனது வீட்டிலிருந்து பேருந்திலே அரை மணிநேர பயணத்தின் பின்னரே பிரத்தியேக வகுப்பை சென்றடைய முடியும். அப்படி ஒரு பயணத்தின்போது தான் நான் அபிராமியை சந்தித்தேன். எனது பயணம் அவளுக்கு முன்னதாகவே கொடிகாமத்தில் ஆரம்பிப்பதால் பெரும் பாலும் எனக்கு ஆசனம் கிடைத்துவிடும். மீசாலையில் ஆரம்பிக்கும் அவளது பயணத்திற்கு தாமதமாகவே ஆசனம் கிடைப்பதால் நின்றபடியே அவளது பயணம் தொடரும்.

சராசரி உயரம் கொண்ட அவளுக்கோ பேருந்தின் மேல் கம்பி எட்டாதநிலையில் பேருந்து இருக்கைகளில் கைகளை பிடித்து நிற்பாள். நீளமான பாவாடையும் சட்டையும் அணிந்து நெற்றியில் நிலாவினை ஒத்த கருத்த பொட்டினையும் இரட்டை ஜடையுடன் அமைதியாக நிற்பவளோ என் கண்களின் ஈர்ப்பினை எவ்விதம் பெற்றாளென்பதையே நான் அறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் வகுப்பிற்கு செல்லும் போது அவள் பேருந்தில் நிற்பதையே பார்த் தவாறு எனது பயணம் அமையும். நான் அறியாமலேயே என் பயணம் முழு வதிலுமே அமைதியாக என்னை ஆட்கொண்டிருந்தாள். இப்படியாக ஒருநாள் பேருந்தில் ஜனக்கூட்டம் அதிகமாக இருக்க பேருந்தில் ஏறிய வளுக்கோ ஆசனங்களின் கைபிடி தூரமாகிப்போனது. பேருந்தின் மேல்கம்பி கைக்கெட்டாத தூரத்திலி ருக்க சாரதியின் ஒவ்வொரு சடுதி பிரேக் கிற்கும் அவள் முன்னும் பின்னுமாக சென்று திக்குமுக்காடினாள். அந்நேரம் அவளை காண எனக்கு ஒருபுறம் சிரிப்பு பீறிட மறுபுறம் அவளது நிலை என்னை சஞ்சலப்படுத்தியது. உடனே அவளை அழைத்து நான் என் ஆசனத்தைக் கொடுத்தபோது அமர்ந்து கொண்ட வளோ தான் இறங்குமிடம் வந்தவுடன் என்னை ஏறெடுத்தும் பார்க்காமல் இறங்கிக் கொண்டாள்.

அப்போது என் மனதில் அவள் நன்றியுணர்வு கொஞ்சமும் இல்லாதவ ளாகவே தோன்றினாள். மறுநாள் அதே பேருந்தில் ஏறியவளோ யாரையோ தேடுவதை உணர்ந்தேன். பேருந்தில் ஏறியதிலிருந்து சிலைபோல் நிற்பவள் அன்று யாரையோ தேடுவதை எண்ணி ஆச்சரியமடைந்தேன். சடுதியில் என் னைக் கண்டவள் நான் பார்ப்பதை அறிந்து திடுக்கிட்டு திரும்பிக் கொண் டாள். அவளது அச்செயல் என்னை அவ்வயதில் சிலிர்த்திட செய்தது. அவள் கடைக்கண்ணில் என்னை நோட்டமி டுவதை அறிந்த நானோ என்னை எண்ணி பெருமிதம் கொண்டேன்.

இப்படியாக எனது பதின்ம வயது காதல் அந்த இரவு பயணத்தில் என் நினைவுகளிலிருந்து மீண்டும் துளிர் விட்டது. அந்த ஞாபகங்கள் வரவே அபிராமியின் தற்போதைய நிலை என்னவாகவிருக்கும் என்ற எண்ணமும் தோன்றியது. அதேநேரம் உணவகம் ஒன்றில் பேருந்து இடைநிறுத்தப்பட்டது. சாரதியும் நடத்துனரும் உணவுண்ப தற்காக செல்ல பேருந்திலிருந்த சிலர் இறங்கி தமது உணவுத் தேவையையும் சிலர் மலசல கழிப்பிடத் தேவையையும் நிறைவேற்றிக் கொண்டனர். நானும் இறங்கி வீட்டிலிருந்து கட்டிவந்த உணவை உணவகத்திலிருந்தே உண் டேன்.

பதினைந்து நிமிட இளைப்பாறலின் பின்னர் பேருந்து மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து அரைமணி நேரத்தின் பின்னர் வவுனியாவை அடைந்தது. அங்கிருந்த சிலர் வெகுநேரமாக நின்றே பயணம் செய்தவர்களுக்கு தமது ஆசனங்களை வழங்கிவிட்டு தாங்கள் நின்றபடி பயணிக்கத் தொடங்கினர். அப்போது இன்னும் எமக்குள்ள மனிதத்தைக் கண்டு மகிழ்ச்சியா கவிருந்தது. உண்ட மயக்கத்தில் என் தலையை வருடிவிட்டாற்போல தூக்கம் சொக்க உறங்கிப் போனவனோ நடத் துனரின் "அநுராதபுர சந்தி.. இறக்கம்." என்ற சத்தத்தில் எழுந்து கொண்டேன்.

எனது இருக்கையிலிருந்து எழுந்து ஆசுவாசப்படுத்திக் கொண்ட நானோ இருந்தவாறே பயணம் செய்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட முதுகுவலியையும் மரத்துப் போன கால்களையும் அத்தோடு உறங்கி வழிந்ததில் ஏற்பட்ட கழுத்து வலியையும் சீர்படுத்திக் கொள்ள முயன்று தோற்றேன்.

ஒருவேளையாக மாலை 7மணிக்கு தொடங்கிய பயணம் நள்ளிரவு 12.30மணிக்கு நிறைவடைகிறது. இன்றைய நாள் பயணமோ சாதாரணமாகிலும் எனது விடலைப்பருவத்தை எனக்கு நினைவூட்டியது ஒருவித ஆனந்தத்தை ஏற்படுத்தியது. ஆனாலுமே கிட்டத்தட்ட 6மணிநேர பயணம் சலிப்படையச் செய்தது. இத்துடன் எனது இன்றைய பயணம் நிறைவடைய அடுத்து வெள்ளிக்கிழமைக்கான எனது அடுத்த பயணத்திற்காக காத்துக் கொண்டே நான் பேருந்திலிருந்து இறங்கிக் கொண்டேன்.

# என்ரை ஐயோ...!

கற்சிலைமடு தாரு

அன்று வெள்ளிக்கிழமை. நேரம் ஏழு மணியிருக்கும். ஜன்னலினூடாக வந்த சூரியக் கதிர்கள் என்னைச் சூடேற்றி எழுப்பிக்கொண்டிருந்தன. தூக்கம் கலைந்து எழுந்தேன். கண்களைக் கசக்கிக்கொண்டு வானை நோக்கியபடி வெளியேறினேன். நீலம் படர்ந்திருந்த வானத்தில் பறவைகள் ஆங்காங்கு பறந்துகொண்டிருந்தன. குருவிகளின் கீச்சிடும் சத்தம் என் காதுகளை மேலும் இனிமையாக்கியது. விவசாயிகள் மாட்டுவண்டில்களில் தத்தம் வயல்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வேறு தொழிலுக்குச் செல்வோர்களும் தங்கள் பணிகளின் நிமித்தம் எங்கோ பயணித்துக் கொண்டிருந்தார்கள். பாடசாலை மாணவர்கள் நடந்தும், சைக்கிள்களிலும் பள்ளிக்குச் செல்லும் காட்சிகளும் தென்பட்டன. பலர் பேருந்தின் வருகைக்காகப் பேருந்து நிலையத்தில் குழுமி நின்றனர். அந்நிகழ்வுகளைப் பார்த்து இரசித்தபடி என் கடமைகளைச் செய்யப் புறப்பட்டேன்.

அம்மம்மாவுக்குத் தேவையான நீரைக் கிணற்றில் அள்ளிக் கொடுத்து விட்டு, சாமி அறையிலிருந்து விபூதியையும் எடுத்துவந்து கொடுத்தேன்.

“அப்பனே பிள்ளையாரப்பா நீதானப்பா எல்லாரையும் காப்பாத்த வேணும்”

என்று சொல்லியபடி விபூதியை நெற்றியில் பூசிக்கொண்டதைப் பார்த்தபடியே என் கடமைகளுக்காக நான் புறப்பட்டேன். காலைக்கடனை முடித்துவிட்டு, பற்தூரிகையோடு மீண்டும் கிணற்றடிக்குச் சென்று கொண்டிருக்கையில்.

“தம்பீ... தம்பீ”

அப்பா தொலைவிலே கூப்பிடும் சத்தம்.

“ஓமப்பா.. வாறன்.. வாறன்..”

என்றபடி ஓடிச்சென்று பார்த்தபோது வயலுக்கு நீர் இறைத்துக்கொண்டிருக்க, எங்கள் தோட்டக் கிணற்றில் பூட்டப்பட்டிருந்த பெரிய மோட்டரிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் அருவியாகக் கொட்டிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்க்கும்போது, ஒரு குளியல் போடவேண்டும் என்ற ஆசை மனதுக்குள் தோன்றியது. ஆனாலும் அப்பா பேசுவார் என்ற பயத்தோடு, அவரின் தேவைகளை நிறைவேற்றிவிட்டு, முகம் கழுவியபடி வீட்டுக்கு வந்தேன். விபூதி தரித்துக் கடவுளை வேண்டிவிட்டு, வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டேன்.

"தம்பீ.. இந்தா பால்"

அம்மா சுடச்சுடக் கொண்டுவந்த தேநீரைக் குடித்தபடியே அம்மம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தேன். பின் அப்பாவுக்காகப் போத்தலில் ஊற்றித் தந்த தேநீரை எடுத்துக்கொண்டு வயலைநோக்கிப் புறப்பட்டேன். வயலுக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் இருமருங்கும் கால்வாய்களில் நீர் ஓடுகின்ற சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. கால்வாய்களின் அருகுப்பகுதிகளில் தென்னந்தோப்புக்களும், வயல்வெளிகளும் காணப்பட்டன. சின்னஞ்சிறுவர்கள் அவ்வாய்க் காலில் குதித்துக் குளித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தொலைவில் தூண்டில் போட்டுக்கொண்டிருப்பதும் தெரிந்தது. இவற்றினைப் பார்த்தபடியே வயலுக்கு நகர்ந்துகொண்டிருந்தேன். மனம் இனிமையான பொழுதை அனுபவித்துக்கொண்டிருந்தது.

"அப்பா இந்தாங்கோப்பா."

கொண்டு வந்த தேநீரை அப்பாவிடம் கொடுத்துவிட்டு, அருகிலிருந்த மண்வெட்டியை எடுத்து வயலுக்கு நீர் பாய்ச்சத் தொடங்கினேன். அப்போதுதான் தனு அவனுடைய அப்பாவுடன் வயல்களைப் பார்வையிட்டபடி வந்து சேர்ந்தான்.

"டேய் மச்சான்.. இண்டைக்கு ஒட்டிசுட்டான் சிவன் கோயில் தேராமடா போவம் வாறியே?"

"உண்மையாவோடா..?"

"ஓமடா உம்மையாத்தான் எல்லாப் பொடியளும் விடியவே போறாங்களடா.."

"சரி வயலப் பாத்திட்டு வா.. ஆத்தில குளிச்சிட்டுப் போவம்"

தனுவோடு கதைத்துவிட்டு நான் வீட்டுக்கு வந்து, எனது ஆடைகளை மின்னழுத்தியால் அயன்பண்ணிவிட்டு, ஆற்றுக்குப் போவதற்குத் தயாராகினேன். எங்கள் வயல்காணிக்குப் பக்கத்தில்தான் பேராறு ஓடுகிறது. வருடத்தில் எப்போதும் வற்றிவிடாமல் ஓடுவதால் அங்குதான் நாங்கள் அதிகம் குளிப்பதுண்டு.

"டேய் வாறியோ வேகமா. நான் வந்திட்டன்"

"வல்லாம் நில்லுடா வல்லாம்"

தனுவின் சத்தம் கேட்டது. உடனே அடுப்படியில் நின்ற அம்மாவை நோக்கி ஓடினேன்.

"அம்மா.. இண்டைக்குக் கோயிலுக்குப் போப்போறம்.. ஆத்தில குளிக்கப் போகட்டா?... தனு வந்திருக்கிறான்"

"விடியக்காலத்தால ஆத்துக்குப் போறியளோ கொப்பர் வந்தா பேசுவேர் கவனமா குளிச்சிட்டு வேகமா வாங்கோ.."

அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டபடியே தனுவோடு ஆற்றை நோக்கி ஓடினேன். எங்களின் பின்னால் தனுவின் நாய்க்குட்டி கண்ணம்மாவும் ஓடிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. கண்ணம்மா என்றால் தனுவுக்கு உயிர். தனுவென்டால் கண்ணம்மாவுக்கு உயிர். ஓடி வந்த கண்ணம்மா தனுவின் தோள்களில் பாய்ந்து ஏறிக்கொண்டது. ஒற்றையடிப் பாதையினூடாக ஆற்றைநோக்கிப் பயணித்தோம். ஆற்றைச் சூழ்ந்திருந்த இயற்கைக் காட்சி எங்களை அமைதிப் படுத்தியது. ஆற்றங்கரையின் நீளத்திற்கும் மருதமரங்கள் காணப்பட்டன. அவற்றுக்கிடையே மாமரங்களும் நின்றிருந்தன. குரங்குகள் மாங்காய்களைப் பறித்து நாசம் செய்துகொண்டிருந்ததை அவதானித்தோம். குட்டிக் குரங்குகள் அங்கும் இங்கும் பாய்ந்து விளையாடிக்கொண்டிருந்தன. பறவைகளும் பழுத்திருந்த பழங்களைத்தின்றுகொண்டிருந்தன. அதைப்பார்த்த எனக்கும் மாங்காய் சாப்பிட வேண்டும்போல் வாய் ஊறியது. சற்றும் யோசிக்காமல் உடனே பக்கத்தில் நின்ற தனுவை ஏற்றி மாங்காய் பறித்துக்கொண்டேன்.

"டேய் வீட்டபோய் உப்பும் தூளும் எடுத்துட்டு வாடா செமயா இருக்கும்.."

தனுவின் வார்த்தையைக் கேட்டபடி வீட்டை நோக்கி ஓடினேன். சிரட்டையில் உப்பும், தூளும் எடுத்து வந்தேன். பறித்த மாங்காய்களை ஆற்றுநீரிலே நன்கு கழுவிய பின் மாமரத்திலே குத்தி மாங்காய்களை உடைத்துக் கொண்டோம். உடைத்த துண்டுகளை உப்புத்தூளுடன் தொட்டுத் தொட்டுத் தின்னும்போது சொர்க்கம் தெரிவதை உணர்ந்தேன். அது கறுத்தக்கொழும்பான் மாங்காய் என்றபடியால் அவ்வளவு சுவையாக இருந்தது.

திடீரென ஆற்றில் பெரிய சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

"டேய் கண்ணம்மா ஆத்துக்குள்ள விழுந்துட்டடா"

என்று சொல்லி முடிப்பதற்குள் தனு சற்றும் யோசிக்காமல் தான் பாசத்தோடு வளர்த்த கண்ணம்மாவைக் காப்பாற்ற ஆற்றினுள் குதித்து விட்டான். நானோ என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் பார்த்தேன். கண்ணுக் கெட்டிய தூரம்வரை யாரையும் காண வில்லை. நாய்க்குட்டியைக் காப்பாற்றச் சென்ற தனுவோ ஆற்றுப்பள்ளத்தினுள் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தான். எனக்கோ நீச்சல் தெரியாது. அவனுக்கும் தான்.

"ஐயோ!... ஐயோ! ஓடியாங்கோ ஓடியாங்கோ."

என்று வீரிட்டுக் கத்தினேன். எவரும் வரவில்லை. கண்ணம்மாவையும், தனுவையும் எப்படிக் காப்பாற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை. உடம்பு பயத்தால் நடுங்கியது. ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. சற்றுநேரத்தில் பெரிய ஆற்றுச்சுழி அவனை அடித்துச் செல்ல ஆரம்பித்தது. உடனே நான் அவன் செல்லும் பக்கமாகப் பெரிய கட்டை ஒன்றை எடுத்துப் போட்டேன். ஆனால் எந்தப் பலனும் இல்லை. நாய்க்குட்டியையும் காணவில்லை. பின் தனுவையும் காணவில்லை. தண்ணீருக்குள் தாழ்ந்து போனான். எனக்குப் பயம் இன்னும் அதிகரித்தது. பயத்தில் கத்திக்கொண்டு நின்றேன். திடீரென தாண்டுபோன தனு ஆற்றுக்குள் இருந்த மருத மர வேரைப்பிடித்துக்கொண்டு கிடந்தான். உடனே வயல்வெளிக்கு ஓடினேன். அப்போது யாரோ வயலுக்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தார்கள். உடனே அண்ணனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக் கத்தியபடி ஆற்றங்கரையை நோக்கி ஓடினேன். அண்ணனின் உதவியுடன் தனு மீட்கப்பட்டான். அவனுடைய கண்கள் மூடியிருந்தன. நான் செத்துவிட்டான் என்றே நினைத் தேன். உடனே அண்ணன் அவனுடைய வயிற்றை அமத்திக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கனக்க குடித்துவிட்டதால் தனுவின் வாய்க்குள்ளிருந்து நீர் வெளி யேறியது.

"வற்றாப்பிளைத் தாயே இவன் தப்பிடோனும்மம்மா.... தப்பிடோனு மம்மா"

மனதுக்குள் வற்றாப்பளைக் கண்ணகித்தாயை வேண்டினேன். தனுவும் கண்விழித்தான். இப்போதுதான் எனக்கு நிம்மதி வந்தது. இருவரும் சற்று ஓய்வெடுத்தபின் வீட்டை நோக்கி நகர்ந்தோம். எங்களுடைய உள்ளத்தில் கண்ணம்மாவின் நினைவே வந்து கொண்டிருந்தது. வீட்டுக்குச் சென்று நடந்ததைக் கூறினோம். ஆனால் ஆற்றில் தனு தாண்ட செய்தியைக் கூறவில்லை. தனுவீட்டிலும் இதைத்தான் கூறினோம். கண்ணம்மாவின் இழப்பு எல்லோரையும் கலங்க வைத்தது. கவலையுடன் இருவ ரும் கோவிலை நோக்கிச் சைக்கிள்களில் பயணித்தோம். இன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம் கோவிலில் தேர்த்திருவிழா. வீதிகளில் நிறைந்த மக்கள் கூட்டம் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். வீதிகளில் சொகுசுக்கார்களும், பெரிய பெரிய வாகனங்களும் சென்றுகொண்டிருந்தன. சனங்கள் மாட்டு வண்டில்களிலும் பயணித்துக்கொண்டிருந்தார்கள். இவற்றைப் பார்த்தபடியே நாங்களிரு வரும் கண்ணம்மாவின் பிரிவுத்துயரோடு கோவிலை வந்தடைந்தோம்.

வந்தவுடன் மிதிவண்டிகளை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டுக் கோயிலுக் குள் சென்றோம். இராஜகோபுரம் எங்களை வரவேற்கும்படி அழகாக இருந்தது. தேர் இழுப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண் டிருந்தன. இராஜ கோபுரத்தை வணங் கிபடி உள்ளே சென்றோம். கோயிலைச் சுத்தி வணங்கிவிட்டுக் கடைபோட்டி ருக்கும் பக்கம் சென்றோம். அங்கும் சனங்கள் கூடி நின்றார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அங்குமிங்கும் திரிந்தபடி தமக்கு விரும்பிய பொருட் களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். எங்களுக்குக் கோயில் நிகழ்வுகள் மகிழ்ச்சியையே தரவில்லை. தனுவுக்கு மனது முழுவதும் கண்ணம்மாவின் நினைவே ஓடிக்கொண்டிருந்தை உணர்ந்தேன். பக்த அடியவர்கள் பலவிதமான நேர்த்திகளைச் செய்யும் வண்ணம், கோயிலை வலம்வந்து கொண்டிருந்தார்கள். பாற் காவடி, பன்னீர்க் காவடி, தீர்த்தக் காவடி, தூ க்குக் காவடி, கற்பூரச்சட்டி, பாற்செம்பு, பறவைக் காவடி என நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் ஐஸ்கிறிம் வாங்கிச் சுவைத்தபடி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டி ருந்தோம். நேரமும் சென்று கொண்டி ருந்தது. காலை ஒன்பது மணியிருக்குமென நினைக்கிறேன். தேர் இழுக்க ஆரம்பித்து விட்டது. நாங்களும் ஓடிச்சென்று தேர் வடத்தினைப் பிடித்துக்கொண்டோம். அங்கே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திலிருந்து வந்திருந்த அண்ணாமார்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காமார்களும் கலாசார ஆடைகளில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்கள். யாரோ ஒரு சிறுவன் தொலைந்ததாக அறிவிப்பு நிகழ்ந்துகொண்டிருந்தது. அந்தச் சிறுவன் அழும் சத்தத்தையும் ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்கள். அவ்வளவு சனம் இன்றுகூடி, தேர்த்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்து. நாங்களும் தேரினை இழுப்பதில் ஆர்வமாக இருந்தோம்.

திடீரெனத் தனுவின் தொலைபேசிக்கு அழைப்பு வந்தது. எடுத்துக் காதில் வைத்துக் கலோ... கலோ... என்றான் ஒன்றும் விளங்கவில்லை. அம்மா என்று என்னிடம் சொல்லியபடி கொஞ்சத்தூரம் நகர்ந்து சென்று ஏதோ பேசிக்கொண்டிருந்தான். நானும் அவனருகில் ஓடிச்சென்றேன்.

"டேய் கண்ணம்மா காலொண்டு முறிஞ்சபடி நடக்கேலாம வீட்டு முத்தத்தில இழுத்து இழுத்துக் கிடக்காமடா.... வாடா போவம்...."

என்று சொல்லியபடி சைக்கிள் பார்க்கை நோக்கி ஓடினோம். சைக்கிள் பார்க்கிலிருந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு, அவனை முந்தியபடி தார் றோட்டுக்கு ஏறி வேகமாக மிதிக்கத் தொடங்கினேன். என் பின்னால் தனுவும் வேகமாகவே வீதியைக் கடந்து கொண்டிருந்தான். திடீரெனப் பாரிய சத்தம். திரும்பிப் பார்த்தேன். தனுவைக் காணவில்லை. அதில் நின்ற சனங்களெல்லாம் தலையில் கைவைத்தடி ஓடினார்கள். சைக்கிளை நிறுத்தித் தள்ளிவிட்டு நானும் அவர்களின் பின்னால் ஓடிச்சென்றேன். பெரிய டிப்பர் ஒன்று நடுவீதியில் நிறுத்தப்பட்டிருந்தது. டிப்பரின் சில்லுக்குள் சைக்கிள் நசுங்கிக் கிடக்க, இரத்தம் பரவி வீதியையையே சிவப்பாக்கியது. சன நெரிசலுக்குள்ளால் உள்நுழைந்து அருகில் சென்றேன்.

"என்ரை ஐயோ!... தனு... எங்களை விட்டிற்றுப் போட்டியேடா...."

என்று கண்ணீர் பெருகத் தலையில் அடித்துக் கதறியபடி மல்லாக்காய் நிலத்தில் சரிந்தேன். சில்லுக்குள் நெரிபட்டுச் சிதைந்துபோன தனுவின் உடலும் துடிதுடித்து ஓய்ந்துபோக, அவனது விழிகளும் நெற்றிக்குள் புதைந்தபடி வெள்ளைபிரட்டிக் கிடந்தன.......

## கனதி

சமீபத்தில் இலக்சுமி பிரசுர வெளியீடாக கனதி எனும் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் பிரம்மியா சண்முகராசா. இத் தொகுப்பின் வெளியீட்டுவிழா திருகோணமலையிலும் கிளிநொச்சியிலும் வெகு சிறப்பாக நடந்துள்ளது. இத்தொகுப்பு சமூகத்தின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து 18 சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. சிறப்பான எழுத்து நடையும் உளவியல் ரீதியான அணுகு முறையும் கவிதையாகும் சம்பவங்களும் நிறைந்த நல்ல ஒரு தொகுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி 33 ஒரு பார்வை

தன் வேலைப் பழுவிற்கிடையிலும் எம் அன்பான வேண்டுகோளை ஏற்று எழுத்தாளர்களை ஊக்குவித்தும் அவர்தம் பிழைகளைச் சுட்டிக்காட்டியும் மாதந்தோறும் உங்களை மகிழ்விப்பவர்
**பேராசிரியர்**
**செ. யோகராசா**

**மஞ்சம் - சரவணபவன் ஆதவன்**
காதல் வித்தியாசமான களத்தில் நிகழ்கின்றது. பேசு பொருளுக்குத் தேவையற்ற விபரிப்பு அதிகமுள்ளது. அவ்வாறான விபரிப்பு பேசு பொருளின் முக்கியத்துவம் வெளிப்படுவதனை மழுங்கடித்து விட்டது.

**பெண்ணின் பெருமை- என்.கே.வேணி**
பழைய கரு. தாழ்வுச் சிக்கலுகுள்ளான கணவன் தானாகவே அதை உணர்ந்து திருந்துவதே சற்றுப் புதுமையானது. மேன்மேலும் செதுக்கப்படுவது அவசியமானது.

**யன்னல் ஓரப்பயணம்- திருமலையாள்**
கூறவரும் செய்தி தெளிவாக இருப்பதையும் அதை நோக்கி கதை நகர்த்துவதையும் இப் படைப்பு அவாவி நிற்கிறது.

**வேலியே பயிரை மேய்ந்தது - ரஜிதா அரிச்சந்திரன்**
பழைய கருவாயினும் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அதிர்ச்சி தர வேண்டியவாறு வெளிப்படவேண்டிய கதையின் முடிவு சாதாரணமாக முடிவது எழுத்தாளரின் கவனத்திற்குரியது. இறுதிவரி தவிர்க்கப்படவேண்டியதும் அவசியமானதே.

**கிணற்றடி - கர்ணன் சின்னத்தம்பி**
வழமையாக மறக்க முடியாத கிராமப் பாத்திரங்களை மறக்கமுடியாதவிதத்தில் தருபவர் இவ் எழுத்தாளர் என்பதை மஞ்சரி வாசகர் அறிவர். இவ் விதத்தில் இச் சிறுகதை மேலும் செதுக்கப்பட வேண்டியது அவசியமானது. அதிர்வு அலைகளை ஏற்படுத்துமாறு முடிவும் அமைந்திருக்க வேண்டுமல்லவா?

**தெய்வம் நின்றறுக்கும் - ஆர்த்திகா சுவேந்திரன்**
முக்கியமான சமகாலச் சமூகப் பிரச்சினை வித்தியாசமான முடிவுடன் எழுதப்பட்டிருப்பது பாராட்டிற்குரியதே. முடிவு கதாசிரியரது முடிவாக அமையாது கனகத்தின் மன உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்திருப்பின் இச் சிறுகதை சிறப்பான சிருஷ்டியாக அமைந்திருக்கும்.

**தாய்மை - கமலினி கதிர்**
வித்தியாசமான கரு. வித்தியாசமான பாத்திர சிருஸ்டி. எனினும் மேன்மேலும் செதுக்கப்படுவது மிக அவசியமாகின்றது.

**கெட்டுப் போன காலம் - எம். சீஏ. பரீட்**
முக்கியமான - வித்தியாசமான பேசு பொருள். கதையின் முடிவு பூடகமாக அமைந்திருப்பதால் பெரும்பாலான வாசகர்கள் புரிந்து கொள்ள முடியாது போகும் வாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE

LEC

# ENROLLING NOW
## 2022 / 2023



REGISTER NOW

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

SILK
EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org